வருடாந்த அறிக்கை - 2022

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
கல்வி அமைச்சு
5வது தளம் , “மெஹவரபியச ” கட்டிடம் , கொழும்பு 05

உள்ளடக்கம்

		பக்க
	ஆணைக்குழுவின் உறுப்பினர்	4
	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள்	5
	ஆணையாளரிடமிருந்து செய்தி	6-7
	பணிப்பாளர் /சிரேட்ட நிறைவேற்று அதிகாரியிடமிருந்து செய்தி	8-9
1.	இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு	10
1.1	அறிமுகவுரை	10
1.2	நோக்கு	10
1.3	பணி	10
1.4	குறிக்கோள்கள்	10
1.5	ஆணைக்குழுவின் அதிகாரங்கள் ,செயற்பாடுகள் மற்றும் கடமைகள்	10-11
1.6	அமைப்பாண்மை கட்டமைப்பு	12
1.7	மனித வளங்கள்	13
1.8	ஆணைக்குழுவினது சபை மற்றும் சிரேட்ட முகாமைத்துவ உறுப்பினர்கள்	14
2.	2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்	15
2.1	சஹசக் நிமவும் 2022" சர்வதேச கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்க கண்காட்சி மற்றும் போட்டி – புதிய கண்டுபிடிப்பிக்கள் மூலம் இலங்கை மற்றும் சர்வதேசத்தை இணைக்கும் தளம்	15
2.1.1	2022 ஆம் ஆண்டின் சஹசக் நிமவும் கண்காட்சியின் வளர்ச்சி நிலை	16
2.1.2	சஹசக் நிமவும் சர்வதேச போட்டியின் நடுவர் குழு உறுப்பினர்கள்	17
2.2	புதுப்பிக்கத்தக்க ஆற்றலுடன் தொடர்புற்ற வகையில் நிலையான சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சாரத்திற்கு உற்பத்திக்கு ஏற்ற கண்டுபிடிப்புகளை கண்டறிதல்	18
2.3	புதுப்பிக்கத்தக்க-நிலையான ஆற்றல் மற்றும் அதனுடன் தொடர்பான கண்டுபிடிப்புகளுக்கான கண்காட்சி மற்றும் முதலீட்டாளர் சந்திப்பு	18
2.4	IAFM SL (இலங்கைக்கான புத்தாக்கங்களினை துரிதப்படுத்துவதற்கான நிதி பொறிமுறை) – கண்டுபிடிப்புக்களினை வணிகமயமாக்குவதற்கான திட்டம்	19
2.5	"நவ நிபயும் திரிய" வணிகமயமாக்கல் மட்டத்தில் புத்தாக்கங்களினை தாபிப்பதற்கு	19
2.5.1	கண்டுபிடிப்பாளர் வைத்தியர் துலித சிஹலிந்து ரன்வல "Rhizosaara"	20
2.5.2	கண்டுபிடிப்பாளர் வைத்தியர் என்.ஆர்.பி.நிஷ்ஷங்க – இயற்கை மூலிகையிலான நுளம்பு விரட்டி மற்றும் தைலம்	21
2.6	கண்டுபிடிப்பாளர்களுக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்க நிறுவப்பட்ட தொழில்நுட்ப அடைகாக்கும் மையங்கள்	21
2.7	இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு மற்றும் பிரிட்டிஷ் கணினி சங்கம் (BCS) ஆகியவற்றின் கூட்டு வேலைத்திட்டம் - இலங்கை தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கான பட்டய நிறுவனம்.	22
2.8	விவசாய கண்டுபிடிப்புகளின் மதிப்பீடு மற்றும் ஊக்குவிப்புக்கான திட்டம்	22
2.9	அரச தனியார் பங்குடமை	23
2.10	விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களும் பயிற்சி பட்டறைகளும்	23

2.11	இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கான இலத்தினியல் கற்கை நெறி	23
2.12	இலங்கையின் புதிது கண்டுபிடிக்கும் கலாச்சாரத்தின் முன்னேற்றத்திற்காக இளம் கண்டுபிடிப்பாளர்கள் கழகங்களினை நிறுவுதல்	23
2.13	புதிய கண்டுபிடிப்புக்களினை பிரபல்யப்படுத்துவதற்கு "இலங்கைபுத்தாக்குனர் ஆணைக்குழுவின்" YouTube அலைவரிசை மற்றும் முகப்புத்தக பக்கம்	24
2.14	தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அறிவுசார் சொத்துரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான சேவைகள்	25
2.15	சர்வதேச காப்புரிமைக்கான உதவியைப் பெறுவதற்கான நடைமுறை	25
2.16	புதுக்கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக நடப்பு சமூக பிரச்சனைகளுக்கு தீர்வு	26
2.16.1	புது முறையான தீர்வுகள் மூலம் மனித வனவிலங்கு மோதல்களை குறைப்பதற்கான திட்டங்கள்	26
2.16.2	இளம் கண்டுபிடிப்பாளர் - தொழில்முனைவோர் முன்னணி மேம்பாட்டுத் திட்டம் - YIELD	26
2.17	புத்தாக்கங்களுக்கு சனாதிபதி விருது	27
2.18	கண்டுபிடிப்பாளர்களினை சந்தித்தல்	28
2.19	விஞ்ஞான தினத்தினை கொண்டாடுதல்	28
2.20	ஆணைகுழுவினை சர்வதேச ரீதியில் அங்கீகரித்தல்	28
2.21	தேசிய புத்தாக்குனர் தினம்	29
2.21.1	தேசிய புத்தாக்குனர் தினம் தாபிக்கப்பட்டதன் நோக்கு	29
2.22	இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு -ஹுவாவி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப போட்டி -தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய புத்தாக்க போட்டி	29
2.23	கண்டுபிடிப்புக்களினை ஊக்குவிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் வேறு நிகழ்ச்சித்திட்டங்கள்	30
2.23.1	இலங்கை புத்தாக்குனர்களுக்கான "You tube "பக்கம்	30
2.23.2	உத்தியோகப்பூர்வ இணையத்தளம்	30
2.24	ஊடகத்தின் பங்களிப்பு	31
2.25	இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு - SPAR – இலங்கை கருத்திட்டம்	
2.26	மனித வள அபிவிருத்தி	32
3.	நிதிக்கூற்றுக்கள்	33

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

பேராசிரியர் . N. M. S. சிரிமுது
ஆணையாளர்
(01.01.2022 இலிருந்து 31.12.2022 வரையில்)

வைத்தியர் . R. M. H. M. அனுப இந்திக ஹேரத்
உதவி **ஆணையாளர்**
(01.01.2022 இலிருந்து 31.12.2022 வரையில்)

பேராசிரியர் நீலிகா மலவிகே
உதவி **ஆணையாளர்**
(01.01.2022 இலிருந்து 21.06.2022 வரையில்)

திருமதி.கல்பனி இராஜபக்ச
உதவி **ஆணையாளர்**
(01.11.2022 இலிருந்து 31.12.2022 வரையில்)

திரு . P. V. B. P. சிசிர நந்தன
திறைசேரி பிரதிநிதி
(01.01.2022 இலிருந்து 18.02.2022 வரையில்)

திருமதி . M. K. D. N. மாதம்பே
திறைசேரி பிரதிநிதி
(26.02.2022 இலிருந்து 31.12.2022 வரையில்)

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள்

திரு . P. V. B. P. சிசிர நந்தன
திறைசேரி பிரதிநிதி
(01.01.2022இலிருந்து 18.02.2022 வரையில்)

திருமதி . M. K. D. N. மாதம்பே
திறைசேரி பிரதிநிதி
(26.02.2022 இலிருந்து 31.12.2022 வரையில்)

பேராசிரியர் நீலிகா மலவிகே
உதவி **ஆணையாளர்**
(01.01.2022 இலிருந்து 21.06.2022 வரையில்)

கலாநிதி . R. M. H. M. அனுப்ப இந்திக ஹேரத்
உதவி **ஆணையாளர்**
(01.01.2022 இலிருந்து 31.12.2022 வரையில்)

திருவதி . H. D. அனுருத்திகா
உள்ளக கணக்காய்வாளர்
(01.01.2022 இலிருந்து 31.12.2022 வரையில்)

திரு . H. M. U. S. A. விஜேகோன்
கணக்காய்வாளர் நாயக திணைக்கள பிரதிநிதி
(01.01.2022 இலிருந்து 31.12.2022 வரையில்)

திருமதி . W. P. L. S. R. பெரேரா (2021.01.01- 2021.12.31)
கணக்காய்வாளர் நாயக திணைக்கள பிரதிநிதி
(01.01.2022 இலிருந்து 31.12.2022 வரையில்)

ஆணையாளரிடமிருந்து செய்தி



பேராசிரியர் . N. M. S. சிரிமுது
ஆணையாளர்
இலங்கை புத்தாக்குனர்
ஆணைக்குழு

உலகை வெற்றிகொள்ளக்கூடிய ஆக்கபூர்வமான நாளைய தினத்தின் நிமித்தம், புதிய பொருளாதார வடிவில் இறங்குவதற்கு இலங்கையர்களாகிய எமக்கு இது ஒரு ஆசீர்வாதமாக அமையும்.

நாளை உலகை வெல்லக்கூடிய இலங்கையின் ஆக்கப்பூர்வமான மக்களுக்கு ஒரு புதிய அணுகுமுறையை வழங்குவதற்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் (SIC) பங்கு அளப்பரியது ஆகும். வேகமாக அபிவிருத்தி அடைந்து வரும் இந்த உலகில் கண்டுபிடிப்புகளும் புத்தாக்கங்களும் வளர்ச்சியின் அடித்தளம் என்பது எவருக்கும் தெளிவான உண்மை, மேலும் வளர்ச்சியின் பாதையினை நோக்கி நகரும் இலங்கையின் கண்டுபிடிப்புகளுக்கு, உயிர் மூச்சாக நின்று தன் சேவைகளினை இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு வழங்குகிறது.அந்நிய செலாவணி மற்றும் உள்ளூர் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் தாக்கத்தினை ஏற்படுத்தும் கண்டுபிடிப்புகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய புத்தாகங்களின் தாக்கமானது, இலங்கையின் சமூகத்தையும் அளப்பரிய அளவில் பாதிக்கின்றது.

கண்டுபிடிப்புகளின் ஊடாக அபிவிருத்தியடைந்து வரும் இவ்வாறான யுகத்தில், இலங்கையின் கண்டுபிடிப்புகளுக்கு உயிர் மூச்சாக நின்று தன் சேவைகளினை வழங்கும் நிறுவனமாக இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு அமைகிறது . அந்நிய செலாவணி மற்றும் உள்ளூர் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் தாக்கத்தினை ஏற்படுத்தும் கண்டுபிடிப்புகள் மற்றும் தொடர்புடைய புத்தாகங்களின் தாக்கமானது, இலங்கையின் சமூகத்தையும் அளப்பரிய அளவில் பாதிக்கின்றது.

ஆணைக்குழுவின் வருடாந்த நிகழ்வான "சஹசக் நிமவும்" சர்வதேச கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்க கண்காட்சியில் மூலம் , கண்டுபிடிப்பாளர்கள் சங்கங்களினை நிறுவுதல், கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குதல், தகுதியான கண்டுபிடிப்பாளர்களுக்கு கடன் மானியங்களை வழங்குதல், புதிய தொழில்நுட்ப நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் கண்டுபிடிப்புகளுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளினை உருவாக்கல் போன்றவை ஏற்படுத்தப்படுவதுடன் . சிறந்த அறிவு மற்றும் புதிய பொருளாதார அமைப்புகள் பற்றிய கருத்துக்களுடன் புதிது கண்டுபிடிப்பாளர்களைப் பெறுவதற்கான வாய்ப்புகளும் இக்கண்காட்சியின் மூலம் எண்ணற்றவையாக கிடைக்கப்பெறும். நமது கண்டுபிடிப்பாளர்கள் தொழில்முனைவோராக மாறி, பொருளாதார ரீதியில் தன்னிறைவு அடைந்து, அவர்களின் கண்டுபிடிப்புகளுக்கு அதிக வருமானம் கிடைக்கும்போது, உள்ளூர் பொருளாதாரத்தின் தாக்கம் சிறப்பாக உணரப்படும்.

புதிய வடிவமைப்பின் குறைபாடுகள் மற்றும் சாத்தியக்கூறுகளைப் புரிந்துகொண்டு அவற்றுக்கான தீர்வுகளை வழங்குவதன் மூலம், புதிய தொழில்நுட்ப முறைகளைக் கண்டறிந்து வடிவமைப்பின் பாதுகாப்பை உறுதிசெய்ய தேவையான வழிகாட்டுதலை வழங்குவதில் முனைப்புடன் செயல்படுவோம் என்பதுடன்,புதிய வடிவமைப்பை உருவாக்குவதற்கான காப்புரிமையையும்

பெறுவோம். 2022 ஆம் ஆண்டில், ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட சவால்கள் அளப்பரியவையாக இருந்த போதிலும் இது தொடர்பில் நிறுவன ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் பெறப்பட்ட நேர் அமைச்சின் வழிகாட்டுதலின் அடிப்படையில், பாடசாலைகள் , பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்கள், திறந்த மற்றும் வணிகமயமாக்கப்பட்டவை என 4 முக்கிய பிரிவுகளில் 14 தொழில்நுட்ப துறைகளை இலக்காகக் கொண்ட கண்டுபிடிப்புகள் ஊக்குவிக்கப்பட்டு, முழு நாட்டையும் உள்ளடக்கியதாய் பல நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன.

படைப்பாற்றல் மிகு தயாரிப்புகள் மற்றும் புதிய தயாரிப்புகளுக்கான சந்தையை உருவாக்கல் என்பனவற்றின் மூலம் நாட்டினை மேம்படுத்த மற்றும் புதிய கருத்துக்கள் மற்றும் தயாரிப்புகளை நாட்டில் முன்னிலைப்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதற்காக இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழு உள்ளூர் புத்தாக்கம் மற்றும் ஊக்குவிப்புகளை அதிகரித்து சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி மூலம் இலங்கையின் பெயரை கட்டியெழுப்ப பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இலங்கையின் புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, இலங்கையர்களின் கண்டுபிடிப்புத் திறன்களை வளர்ப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அத்துடன் இலங்கையர் என்ற அடையாளத்துடன் கூடிய சிறந்த புத்தாக்க கலாச்சாரத்தை உருவாக்கும் இலக்கை நோக்கி படிப்படியாக அவர்களினை முன்னேற்றுவதற்கும் விரும்புகிறது.இந்த அபிலாஷையை நனவாக்கும் எமது பயணத்தில் எமக்கு ஆசீர்வாதமாகவும் உறுதுணையாகவும் இருந்த மக்களுக்கு எமது நன்றியைத் தெரிவிக்க நாம் மறந்து விடல் கூடாது.

இலங்கையின் கண்டுபிடிப்பாளர்களின் எதிர்காலத்திற்காக அளப்பரிய சேவையை வழங்கிய அனைவருக்கும், இந்த தேசிய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தொடர்ந்து சக்தி அளித்து வரும் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கும் மற்றும் எப்போதும் எங்களுக்கு வழிகாட்டிகளாக இருந்து வரும் ஆணைக்குழுவின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் தனது நன்றிகளினை செலுத்துவதற்கு ஆணைக்குழு கடமைப்பட்டுள்ளது. கண்டுபிடிப்புகளை உற்பத்தி செய்து நாட்டில் புதுமையான கலாச்சாரத்தை உருவாக்க பங்களித்த அனைத்து கண்டுபிடிப்பாளர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கும் அதேவேளையில், கௌரவ. கலாநிதி சுசில் பிரேமஜயந்த அவர்களுக்கும், முன்னாள் அமைச்சர் வைத்தியர். சீதா அரம்பேபொல அவர்களுக்கும், நேர் அமைச்சின் அதிகாரிகளுக்கும் அதுபோன்று அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணிப்பாளர் /சிரேட்ட நிறைவேற்று அதிகாரியிடமிருந்து செய்தி



என்,என்.டபிள்யு.தொலவத்த
பணிப்பாளர் /சிரேட்ட
நிறைவேற்று அதிகாரி
இலங்கை புத்தாக்குனர்
ஆணைக்குழு

1979 ஆம் அண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குநர்கள் ஊக்குவிப்பு சட்டத்தின் கீழ் இலங்கை புத்தாக்குநர்கள் ஆணைக்குழுவை நிறுவுவதன் முதன்மைக் குறிக்கோள் உள்நாட்டு கண்டுபிடிப்பை ஊக்குவிப்பதற்கு இலங்கை புத்தாக்குநர்களுக்கு தொழில்நுட்பஇ நிதியியல் மற்றும் சட்ட ஆதரவை வழங்குவதாகும். 2022 சவால்மிக்க ஆண்டில் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரங்களை இவ்வாண்டறிக்கை உள்ளடக்குவதுடன் முன்னெடுக்கப்பட்ட முக்கிய பணிகளை சுருக்கமாக குறிப்பிடுவதற்கு நான் விரும்புகின்றேன்.

- "சஹசக் நிமவும்;" சர்வதேச புத்தாக்குநர்கள் மற்றும் புத்தாக்குநர்கள் போட்டியினை நடாத்தி இதனூடாக உள்நாட்டு பொருளாதாரத்தை வலுப்;படுத்துவதன் மூலம் வெளிநாட்டு வருவாயினை ஈட்டுதல்.
- தொழில்நுட்ப மேம்படுத்தல்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் உள்நாட்டு புத்தாக்குநர்களின் கண்டுபிடிப்புக்களையும் புத்தாக்கங்களையும் வர்த்தகமயப்படுத்துவதற்கு அவசியமான தரச்சான்றிதழை வழங்குதல்.
- புத்தாக்குநர்களுக்கு மிகவும் விரிவான மற்றும் வினைத்திறன் மிக்க சேவையினை வழங்குவதற்கு அரசாங்கம் மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல்
- ஸ்பார் இலங்கை சிறப்பு அங்காடிச் சங்கிலி மூலம் சந்தைப்படுத்துவதற்கு இறக்குமதி பிரதியீடுகளாக பயன்படுத்தக் கூடிய 14 கண்டுபிடிப்புக்களை அறிமுகப்படுத்தவதன் மூலம் நிலவுகின்ற சவால்மிக்க சூழலில் உள்நாட்டு பொருளாதாரத்திற்கு பங்களிப்பு வழங்குதல்.
- கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கங்கள் பற்றிய இளம் சமூகத்தினருக்கு அறிமுகப்படுத்துவதற்கும் அவர்களது ஆக்கத்திறனை மேம்படுத்தவதற்கும் பாடசாலைகள்இ பல்கலைக்கழங்கள்இ மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களில் புத்தாக்குநர்கள் கழங்கங்களை உருவாக்குதல்
- புத்தாக்க தொழில் முயற்சியாளர்களை ஊக்கவிப்பதற்கும் கண்டுபிடிப்புக்களை வர்த்தகமயமாக்குவதற்கும் தொடக்க மூலதனத்தை வழங்குவதற்கும் அரச வர்த்தக வங்கிகளுடனான கூட்டிணைப்புடன் புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்தவதற்கான புதிய கருத்திட்டம் ஒன்றினூடக கடன் வசதிகளை வழங்குவதற்கு திட்டமிடுதல்

அரசாங்க மானியங்கள் மற்றும் நிதியியல் உதவிகளில் தங்கியிருப்பதில் இருந்து தவிர்ந்திருக்கும் பொருட்டு உள்நாட்டு பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அவர்களின் ஆக்கத்திறனை பங்களிப்பதன் மூலம் கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கங்களின் உருவாக்கத்திற்கு வினையூக்கமளிக்கின்ற சூழல் ஒன்றினை உருவாக்குவது ஆணைக்குழுவின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும்.

உள்நாட்டு பொருளாதாரத்தின் தற்போதைய சவால்மிக்க சூழலில் கண்டுபிடிப்புக்கள் துறையில் புத்தாக்கத்தினை ஊக்குவிப்பதற்கான உபயோகத்தினையும் தேவையினையும் நன்குபுரிந்து கொண்டுள்ளதுடன் நிரல் அமைச்சின் பரிந்துரையின் மீது விடுவிக்கப்படும் திறைசேரி ஒதுக்கீடுகளை செயல்திறன்வாய்ந்த விதத்தில் பயன்படுத்துவதற்கு எமக்கு இயலுமாக உள்ளது.

ஆணைக்குழுவின் ஆளுகைச் சபையினால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களும் அனுமதிகளும் மிகவும் உதவக்கூடியதாக இருந்ததுடன் கண்டுபிடிப்புக்களையும் புத்தாக்கங்களையும் மேம்படுத்தி ஊக்குவிப்பதில் ஒட்டுமொத்த பங்காற்றுவதற்காக 2022 ஆம் ஆண்டு முழுவதும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆணைக்குழுவின் அலுவலர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

விரிவான அனுபவம் மற்றும் அறிவு என்பவற்றை கருத்திற்கொண்டு ஆண்டுமுழுவதும் அதேபோன்று தற்போதைய உள்நாட்டு மற்றும் சர்வதேச சூழலில் நாம் பயனடைந்துள்ளதுடன் 2023 ஆம் ஆண்டில் தரம்வாய்ந்த பெறுபேறு நோக்காக கொண்ட நிகழ்ச்சிதிட்டங்களினை ஆணைக்குழு எதிர்பார்க்கிறது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் ஆக்கபூர்வமற்ற சூழல் என்பவற்றுக்கு மத்தியில் ஆணைக்குழுவின் ஆளுகை சபையின் அனைத்து உறுப்பினர்கள்இ அனைத்து அலுவலர்கள் மற்றும் நிதியமைச்சின் செயலாளர் அத்துடன் அனைத்து செயலாளர்இ அரசாங்க மற்றும் அரசுசாரா நிறுவனங்கள் ஆகியோரின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக உள்நாட்டு பொருளாதாரத்திற்கு ஆணைக்குழுவினால் அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டன. குறித்த காலப்பகுதியின் போது நிரல் அமைச்சின் பதவியினை வகித்த கௌரவ அமைச்சரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற ஆதரவை நான் நன்றியுடன் நினைவுகூறுவதுடன் எதிர்காலத்திலும் அவர்களது ஆதரவை ஆணைக்குழு பெற்றுக்கொள்ளும் என நான் நம்புகின்றேன்.

இறுதியாக 2022ம் அண்டில் ஆணைக்குழுவுடன் முனைப்பாக பங்கேற்பதன் மூலம் உள்நாட்டு பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கு பங்களித்த அனைத்து புத்தாக்குநர்களையும் நான் நன்றியுடன் நினைவுகூருகின்றேன். தேசிய இலக்குகளை அடைவதற்கு உயர்ந்தபட்ச ஆதரவினை வழங்குவதற்கு எம்முடன் கைகோர்க்குமாறு நாம் அனைத்து இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கும் புத்தாக்குனர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

1. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

1.1 அறிமுகவுரை

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கத்தினை கொண்ட இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைவுற தாபிக்கப்பட்ட நியதிசட்ட சபையான இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் (SLIC), பிரதான குறிக்கோளானது, அக புத்தாக்குனர்களின் புத்தாக்க திறனுக்கு ஆதரவு மற்றும் ஊக்குவிப்பு வழங்குதல், புத்தாக்கங்களின் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஒதுக்கீடுகளினை மேற்கொள்ளல் என்பனவாகும் .தற்போது ஆணைக்குழுவானது,கல்வி அமைச்சின் கீழ் செயற்படுகிறது.

1.2 நோக்கு

" கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக சுபீட்சமடைதல் "

1.3 பணி

"தேசத்தில் புத்தாக்க இயலளவுகளை வெளிக்கொணர்கின்ற முன்னணி வினையூக்கியாக திகழ்தல். .சிந்தனைகளினை செய்முறை பிரயோகங்களாக மாற்றுகின்ற செயன்முறையினை வசதிப்படுத்தும் முன்னோடியாக விளங்குதல் ".
"

1.4 குறிக்கோள்கள்

1.4.1இலங்கை பிரசைகளினை புத்தாக்கம் மற்றும் புதுகண்டுபிடிப்புக்களினை செய்வதற்கு ஊக்குவித்தல்

1.4.2 புத்தாக்குனர்களுக்கு தொழில் நுட்பவியல் உதவிகள் , நிதி உதவிகள் மற்றும் சட்ட உதவிகளினை வழங்கல்

1.4.3 **1979** ஆம் ஆண்டின் **53** ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தில் குறித்துரைப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்

1.4.4 மேற் கூறப்பட்ட சகல குறிக்கோள்களினையும் சாதிப்பதற்கு தேவையான சகல செயற்பாடுகளினையும் முன்னெடுத்தல்

1.5 ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள்

அ) புத்தாக்குனர் புத்தாக்கங்களை காப்புரிமை வழங்கப்படுதலிற்கு ஏற்புடையதா என உறுதி செய்து கொள்வதற்கு அவர்களின் புத்தாக்கங்களை பரிசலித்து அவர்களுக்கு தொழினுட்பவியல் உதவிகளை வழங்கல் மற்றும் ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய புத்தாக்குனர்களுக்கு காப்புரிமை விண்ணப்பங்களை தயாரிக்க உதவி செய்தல்;

ஆ) ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவுற காப்புரிமை பெற்றுக்கொண்ட புத்தாக்கங்களையும் மற்றும் காப்புரிமை பெறப்படாது நிலுவையாக இருக்கும் புத்தாக்கங்களையும் விருத்தி செய்வதற்கு , நேர்த்தியாக்குவதற்கு நிதியுதவிகளை வழங்கல்;

இ) ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவுற இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் புத்தாக்குனர்களுக்கு காப்புரிமைகளை பெற்றுக்கொள்வதற்கும் அவை சூறையாடப்படாது பாதுகாக்கபடுவதற்கும் சட்ட ரீதியாக உதவியாக இருத்தல்;

ஈ) இலங்கைக்கு பயனளிக்ககூடிய புத்தாக்கங்களை அப்புத்தாக்கங்களின் முக்கியத்துவம் மற்றும் வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான சாத்தியத்தன்மை என்பனவற்றை கருத்திற்கொண்ட பின்பு அவற்றை மேலும் உற்பத்தி செய்வதற்காக தேவையான நிதியுதவியை வழங்குவதற்கு அரசின் கீழடங்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு அவர்களுக்கு நீண்ட கால கடன் வழங்க பரிந்துரைத்தல்;

உ)புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களுக்கான சந்தையினை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தேடிக்கொள்வதற்கு உதவியாக இருத்தல்;

ஊ) புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களின் பெறுமதியினை பலர் அறியச்செய்யும் வகையில் வருடாந்தம் கண்காட்சிகளை "புத்தாக்கங்களுக்கான ஜனாதிபதி விருது" எனும் தலைப்பில் நடாத்தி அந்த கண்காட்சி விழாவின் போது இலங்கையில் காப்புரிமை பெற்ற புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்கள் தொடர்பில் விருதுகள் வழங்கப்படும் என்பதுடன் இந்த விழாவின் போது தெரிவு செய்யப்படும் புத்தாக்கங்களாவன விவசாயம் , இரசாயணவியல் , மருத்துவம் , தேசிய பாதுகாப்பு . மருந்தகவியல் . பௌதிகவியல், பொது பாதுகாப்பு மற்றும் நலன்புரி .பொதுப்பணிகள் , போக்குவரத்து மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் ஆகிய துறைகளுடன் தொடர்புடைய துறைகளினை சார்ந்தவையாக இருத்தல் வேண்டும்.

எ) ஒரு பொது ஆராய்ச்சி ஆய்வுகூடம் மற்றும் சோதனை நிலையத்தை தாபித்தல். அங்கீகரிக்கப்பட்ட புத்தாக்குனர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட தமது புத்தாக்கங்களை மேலும் சீர்படுத்திக் கொள்வதற்கு இந்த ஆராய்ச்சி கூடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சோதனை சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்

ஏ) இலங்கை வாழ் மக்களிடையே புதிது புனைதல் மற்றும் படைப்பாக்கற்றிறன்; என்பனவற்றை மேம்படுத்தவும் மற்றும் வருடாந்தம் இடம்பெறும் "ஆக்கற்றிறன் மிகு ஆராய்ச்சி போட்டியில்" "புத்தாக்கத்திற்கான ஜனாதிபதி விருது வைபத்தின்" நடுவர்களால் மேலே பந்தி (ஊ) வில் கூறப்பட்டதும் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத்துடன் தொடர்புடைய துறைகளில் புதிய படைப்புக்களை படைத்தலில் துணையாக இருப்பதற்கும் மற்றும் அதில் வெற்வியாளர்களை தெரிவுசெய்து பணப்பரிசு மற்றும் பதக்கங்களை வழங்குவதற்கும்;


ஐ) புத்தாக்கம் , ஆராய்ச்சிகள் மற்றும் பொதுவான விஞ்ஞானம் என்பவற்றில் தகவல்களை பிரிசுரித்தலும் பரப்புவதற்கு;

ஒ) புத்தாக்குனர்களிடையே கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கு ஒரு ஒழுங்கு முறையில் மாதாந்தம் கூட்டத்தொடர்களை நடாத்துவதற்கு

ஓ) புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கான சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கு இலங்கை புத்தாக்குனர்களுக்கு உதவுதல் அல்லது அத்தகைய போட்டிகளில் அவர்களை பங்குபெறச் செய்வதற்கு பரிந்துரைத்தல் மற்றும்

ஔ) இலங்கை வாழ் இளைஞர்களிடையே படைப்பாற்றல் திறனை ஊக்குவிப்பதற்கு பள்ளிகூடங்கள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆக்கற்றிறன் சங்கங்களை ஒழுங்கமைத்தல்.

1.6 அமைப்பாண்மை கட்டமைப்பு



1.7 மனித வளங்கள்

பதவி	அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலைப்பிரிவு	2022ஆம் ஆண்டில் தொழில் நிலைப்பிரிவு	2022,டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறான தொழில் நிலைப்பிரிவு
பணிப்பாளர் (சிரேட்ட நிறைவேற்று அலுவலர்)	01	01	-
பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளர்	02	02	-
பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளர் (நிதி)	01	01	-
சட்ட அலுவலர்	01	-	01
நிகழ்ச்சித்திட்ட அலுவலர்	03	03	-
நிர்வாகஅலுவலர்	01	01	-
நிதி அலுவலர்	01	01	-
ஆராய்ச்சி உதவியாளர்	05	02	03
முகாமைத்துவ உதவியாளர்	07	05	02
சாரதி	04	04	-
அலுவலக உதவியாளர்	02	02	-

1.8 ஆணைக்குழுவினது சபை மற்றும் சிரேட்ட முகாமைத்துவ உறுப்பினர்கள்



பேராசிரியர் . N. M. S. சிரிமுது
ஆணையாளர்



வைத்தியர் . M.H.M.
அனுப இந்திக
ஹேரத்
உதவி ஆணையாளர்



திருமதி கல்பனி
இராஜபக்ச
உதவி
ஆணையாளர்



திருமதி . M. K. D. N.
மாதம்பே
திறைசேரி
பிரதிநிதி



திரு.N.N.W. தொலவத்த
பணிப்பாளர்/சி.நி.அ .



செல்வி . D . A.
சரத்சந்திர

உதவி பணிப்பாளர்
(நிதி)



திரு.D.M.L.ரத்நாயக

உதவி பணிப்பாளர்
(கருத்திட்டங்கள்)



திருமதி.P.L.லியனகம

உதவி பணிப்பாளர்
(விசேட
கருத்திட்டங்கள்)

2. 2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

2.1 "சஹசக் நிமவும் 2022" சர்வதேச கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்க கண்காட்சி மற்றும் போட்டி – புதிய கண்டுபிடிப்பிக்கள் மூலம் இலங்கை மற்றும் சர்வதேசத்தை இணைக்கும் தளம்.

"சஹசக் நிமவும்" சர்வதேச கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்க கண்காட்சி மற்றும் போட்டி என்பது புத்தாக்குனர்களுக்கு சரியான சமூகமயமாக்கல், முதலீட்டாளர் சமூகத்துடன் தொடர்புகொள்வதன் ஊடாக தயாரிப்புகளை வணிகமயமாக்கல் நிலைக்கு கொண்டு செல்வது, மற்றைய புத்தாக்குனர்களுடன் அறிவையும் தொழில்நுட்பத்தையும் பகிர்ந்து கொள்வது, சாதனைகளுக்கு உரிய பாராட்டுகளைப் பெறுவதுடன், சர்வதேச அளவிலான கண்காட்சியில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறுவது போன்ற தனித்துவமான நன்மைகளை வழங்கும் ஒரு திட்டமாகும்.
இந்தப் போட்டியில், பாடசாலைகள் , பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்கள், வணிகமயமாக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் மற்றும் திறந்த வகை ஆகிய நான்கு முக்கிய பிரிவுகளின் கீழ் பின்வரும் பதினான்கு (14) தொழில்நுட்பத் துறைகளில் இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் போட்டியில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படும்.

- பொது பாதுகாப்பு, நலன் மற்றும் தேசிய பாதுகாப்பு
- இரசாயானவியல்
- உணவு தொழில்நுட்பம்
- மருத்துவம் மற்றும் மருந்தகம்
- பாரம்பரிய மருத்துவம்
- பொதுப்பணி மற்றும் உள்கட்டமைப்பு பொறியியல்
- தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம்
- பயன்பாட்டு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- பௌதீகவியல்
- விவசாயம்
- ஆற்றல்
- போக்குவரத்து
- பொறியியல்

நாட்டில் தற்போதைய பொருளாதார மந்தநிலை மற்றும் COVID-19 போன்ற சுற்றுச்சூழல் நிலைமைகள் இருந்தபோதிலும், இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழுவானது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இடையூறு இல்லாமல் தனது திட்டங்களைத் தொடர்கிறது.
இதன் விளைவாக, மாகாண மட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் நாடளாவிய ரீதியில் ஆக்கப்பூர்வமான சமூகங்களை ஒன்று திரட்டி, முன்னர் நடத்தப்பட்ட சஹசக் நிமவும் கண்காட்சியானது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஒரு நிகழ்நிலை ஊடான போட்டியாக முன்னெடுக்கப்பட்டது .
தேசிய கண்டுபிடிப்பாளர்கள் தினத்தை முன்னிட்டு, "சஹசக் புத்தாக்கங்கள் 2021" விருது வழங்கும் விழாவானது 2022, அக்டோபர் மாதம் 26 ஆம் திகதியன்று இலங்கை திறந்த பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி நதீகா வடலியத்த, பணிப்பாளர் நாயகம் திருமதி குமாரி மீகஹகொடுவ, பணிப்பாளர் நாயகம் திரு.பி.எம்.தர்மதிலக்க ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்துகொண்டதுடன், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், இலங்கைக் கண்டுபிடிப்பாளர்கள் உட்பட 200 முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.
இதன்படி, 2021 ஆம் ஆண்டிற்கான தேசிய போட்டியில் வெற்றி பெற்ற கண்டுபிடிப்பாளர்களில் அடையாளம் காணப்பட்ட வெற்றியாளர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் மற்றும் 30 தங்கப் பதக்கங்கள், 51 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 39 வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. பாடசாலை பிரிவில் கனிஷ்ட Dasis வெற்றிக்கிண்ணமானது ""Smart Dustbin " என்ற கண்டுபிடிப்புக்கும் , அதே நேரத்தில் பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்கள் பிரிவில் Dasis வெற்றிக்கிண்ணமானது ""Bio Green Phosphate Products". என்ற கண்டுபிடிப்புக்கும் வழங்கப்பட்டது. "Utech Blackbox Telematic Device" என்ற கண்டுபிடிப்புக்கு வணிகமயமாக்கல் பிரிவில் Dasis வெற்றிக்கிண்ணமானது வழங்கப்பட்டது. நடுவர்களின் தீர்ப்பின்படி, 2021 ஆம் ஆண்டில் திறந்த பிரிவில் Dasis வெற்றிக்கிண்ணத்தினை வெற்றிக்கொள்வதற்கான தகுதி யாருக்கும் இல்லை என்பதாகும்.



2.1.1. " 2022 ஆம் ஆண்டின் சஹசக் நிமவும்" கண்காட்சியின் வளர்ச்சி நிலை

"சஹசக் நிமவும் 2022" ஆம் ஆண்டின் கண்காட்சிக்காக 403 தேசிய கண்டுபிடிப்புகள் மற்றும் 05 சர்வதேச கண்டுபிடிப்புகள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளன.

போட்டியின் முழு விண்ணப்பங்களும் நிபுணத்துவ குழு ஒன்றினால் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் "தேசிய போட்டி" பிரிவில் இதுவரை 13 தங்கப் பதக்கங்கள், 14 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 17 வெண்கலப் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், "சஹசக் நிமவும் 2022" இல் Dasis வெற்றிக்கிண்ணமானது வழங்குவதற்கான மதிப்பீட்டுப் பணிகளையும், சர்வதேச போட்டிக்கான ஆரம்ப பணிகளினையும் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இம்முறையும், ஆணைக்குழுவின் தற்போதைய சர்வதேச உறவுகளைப் பயன்படுத்தி, வெளிநாட்டு கண்டுபிடிப்பு நிறுவனங்களில் இருந்து உயர் தகுதி வாய்ந்த வெளிநாட்டு மதிப்பீட்டுக் குழுவை சர்வதேச போட்டித் தீர்ப்பிற்காக பின்வருமாறு நியமிக்க முடிந்தது.

2.1.2. "சஹசக் நிமவும்" சர்வதேச போட்டியின் நடுவர் குழு உறுப்பினர்கள்



"சஹசக் நிமவும்" என்பது கண்டுபிடிப்பாளர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்தும் ஒரு தனித்துவமான தளமாகும், இருக்கும் அதே வேளையில் , எதிர்கால சவால்களை எதிர்கொள்வதன் மூலம் சிறந்த முறையில் அபிவிருத்தி அடைந்த இலங்கையை கட்டியெழுப்புவதற்கான முக்கிய அணுகுமுறையாகவும் அதுபோன்று நாளாந்த வாழ்வின் சௌகரியங்களினை, அடைவதற்கு தொழில்நுட்ப கருவிகளை விருத்தி செய்வதற்கான வழியினையும் தருகிறது .

2019 ஆம் ஆண்டு வரையில் , அரசாங்க திறைசேரியை மட்டுமே நம்பியிருந்த இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது , 2019 ஆம் ஆண்டு முதல் வருமானத்தினை பிறப்பித்துக்கொள்ளக்கூடிய பாதையில் பிரவேசிக்கிறது. அதன்படி, வெளிநாட்டு கண்டுபிடிப்புகளை பதிவு செய்வதன் மூலம் ஆணைக்குழு வருமானத்தை ஈட்டியுள்ளது. ஆண்டு 2019. இதன்படி, 2019 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு கண்டுபிடிப்புகளை பதிவு செய்வதன் மூலம் ஆணைக்குழு வருமானத்தினை ஈட்டியுள்ளது என்பதுடன், கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குவதன் மூலம் உள்ளூர் வருமானத்திற்கு வலுவினை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய ரீதியில் வருவாயினை ஈட்டியதன் மூலம், ஆணைக்குழுவானது, அரசாங்க திறைசேரிக்கும் உதவிக்கரம் நீட்டி யுள்ளது.

வருடம்	ஈட்டிய தொகை	
2022	வெளிநாட்டு நாணயம் என்ற வகையில்	500 USD
2022	உள் நாட்டு நாணயம் என்ற வகையில்	137000 LKR

2.2 புதுப்பிக்கத்தக்க ஆற்றலுடன் தொடர்புற்ற வகையில் நிலையான சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சாரத்திற்கு உற்பத்திக்கு ஏற்ற கண்டுபிடிப்புகளை கண்டறிதல்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது புதுப்பிக்கத்தக்க ஆற்றலுடன் தொடர்புற்ற வகையில்,நிலையான ஆற்றல் உற்பத்தி மற்றும் ஆற்றல் நெருக்கடி ஆகியவை தொடர்பில் புதுமையான தீர்வுகளைக் கண்டறிய முன்முயற்சி எடுத்துள்ளது.தற்போது, நாட்டின் பெரும்பாலான மின்சாரத் தேவைகளாவான, புதுப்பிக்க இயலாத மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகிறது . ஆரம்பத்தில், 44 கண்டுபிடிப்புகள் நிபுணர்கள் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட 11 கண்டுபிடிப்புகளின் முன்மாதிரிகளை மேம்படுத்துவதற்கு தேவையான ஆதரவை வழங்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டமானது, எரிசக்தி அமைச்சு, நிலையான எரிசக்தி அதிகார சபை, இலங்கை மின்சார சபை, பல்கலைக்கழகங்கள் மற்றும் உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டது.

2.3 புதுப்பிக்கத்தக்க-நிலையான ஆற்றல் மற்றும் அதனுடன் தொடர்பான கண்டுபிடிப்புகளுக்கான கண்காட்சி மற்றும் முதலீட்டாளர் சந்திப்பு

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு, நிலையான எரிசக்தி அதிகார சபை மற்றும் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் ஆகியவை இணைந்து ஆற்றல் தொடர்பான கண்டுபிடிப்புகள் எனும் பொருள் தொடர்பில் ஒரு கண்காட்சியை 2022 செப்டெம்பர் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் அகில இலங்கை பௌத்த பேரவை வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்தது. கண்காட்சிக்காக மொத்தம் 75 கண்டுபிடிப்புகள் முன்வைக்கப்பட்டிருந்தன , மேலும் கண்டுபிடிப்பாளர்கள் முதலீட்டாளர்களைச் சந்திக்கும் வாய்ப்பு, காப்புரிமை விண்ணப்பங்களுக்கான ஆதரவு மற்றும் பல்வேறு ஆற்றல் தொடர்பான தொழில்நுட்பங்களைப் பற்றி அறியும் வாய்ப்பு போன்ற பல நன்மைகளைப் இதன் மூலம் கண்டுபிடிப்பாளர்கள் பெற்றனர்.





2.4 IAFM SL கண்டுபிடிப்புக்களினை வணிகமயமாக்குவதற்கான திட்டம் (இலங்கைக்கான புத்தாக்கங்களினை துரிதப்படுத்துவதற்கான நிதி பொறிமுறை) –

இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஊக்குவிப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஆணைக்குழுவால் அடையாளம் காணப்பட்ட இலங்கைக்கு பயனுள்ள கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குவதற்கு தேவையான நிதி வசதிகளைப் பெறுவதற்கு கடன் வழங்கும் நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு இந்த நிதியாண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த புதிய அணுகுமுறையில் இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கு அவர்களின் காப்புரிமைகளை மட்டும் பிணையமாக வைத்து, அவர்களின் கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குவதற்கான நிதி வசதிகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

இதற்கான பூர்வாங்க அணுகுமுறையாக, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிராந்திய அபிவிருத்தி வங்கி போன்ற பிரதான பொது நிதி நிறுவனங்களுக்கு ஆணைக்குழு எழுத்துப்பூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளது. அந்த கோரிக்கைகளுக்கு இலங்கை வங்கியும் பிராந்திய அபிவிருத்தி வங்கியும் சாதகமாக பதிலளித்துள்ளதுடன், இரண்டு வங்கிகளுடனும் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. பிராந்திய அபிவிருத்தி வங்கியுடன் இவ்விடயம் தொடர்பில் கையெழுத்தான பூர்வாங்க புரிந்துணர்வு ஒப்பந்தமானது , மிகவும் நெகிழ்வான பதிலாக அமைந்திருந்தது . ஆணைக்குழுவும் பிராந்திய அபிவிருத்தி வங்கியும் இணைந்து ஆணைக்குழுவினால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட ஏழு (07) கண்டுபிடிப்பாளர்களின் கள அவதானிப்புகளின் வணிகமயமாக்கும் திறன் மற்றும் நிதித் தேவையை நிறைவு செய்துள்ளன.







2.5 “நவ நிபயும் திரிய ” வணிகமயமாக்கல் மட்டத்தில் புத்தாக்கங்களினை தாபிப்பதற்கு

வணிகமயமாக்கலுக்கான சந்தை வாய்ப்பு உள்ள புத்தாக்கங்களுக்கு, வட்டி இல்லாத கடன்கள் வழங்கப்படுவதோடு இக்கடன்களாவன ஒப்புக்கொள்ளப்பட்ட காலப்பகுதிக்குள் புத்தாக்குனர்களினால் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும் என்ற அடிப்படையின் கீழ் வழங்கப்படுகிறது. இந்தக் கடன்களாவன குறிப்பிட்ட சில அளவுகோல்களைப் பின்பற்றி வழங்கப்படுவதோடு,இவற்றுக்கு மதிப்பீட்டுக் குழுவினது பரிந்துரைகள் அவசியமாகின்றன. ஒரு புதிய கண்டு பிடிப்பினை ஒரு பூரணத்துவம் மிக்க தயாரிப்பாக மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப ஆதரவு, சோதனைத் தேவைகள் மற்றும் நிதி உதவி அல்லது அரசு நிறுவனம் மூலம் சோதனை அறிக்கைகளைப் பெறுவதற்கான ஆதரவு மற்றும் நிதி பங்களிப்பு, வட்டியில்லா கடன் வழங்குதல் மற்றும் முன்மாதிரிகளை தயாரிப்பதற்கான ஆதரவு போன்ற பல்வேறு அம்சங்களில் உதவிகள் இதன் மூலம் நல்கப்படுகின்றன

"நவ நிபயும் திரிய "வானது அரசாங்க நிறுவனம் மூலம் சோதனை அறிக்கைகளைப் பெறுவதற்கு தொழில்நுட்ப ஆதரவு அல்லது நிதி உதவிகளினை வழங்குதல், வட்டியில்லா கடன்களை வழங்குதல், முன்மாதிரிகளின் வளர்ச்சிக்கு ஆதரவளித்தல் போன்ற பல்வேறு அம்சங்களின் மூலம் கண்டுபிடிப்பாளர்களுக்கு உதவுகின்றது.

2.5.1 கண்டுபிடிப்பாளர் வைத்தியர் . துலித சிஹலிந்து ரன்வல - "Rhizosaara"

இத்திட்டத்தின் கீழ், வைத்தியர் துலித சிஹலிந்து ரன்வலவின் கண்டுபிடிப்பான "Rhizosaara" எனும் இக்கண்டுபிடிப்பினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு 5.8 மில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்டதுடன் இதன் கீழ் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படும்.
"Rhizosaara" இன் கண்டுபிடிப்பானது, தற்போது தொழில் ரீதியாக ஒரு மருத்துவரான துலிதா, கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் தனது கற்றலின் போது மேற்கொண்ட ஆய்வக ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி சோதனைகளின் விளைவாக கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இளம் படைப்பாற்றல் மிக்க மருத்துவப் பயிற்சியாளர், தாவரங்களின் பாலை வேர் வளர்ச்சிகளின் நிமித்தம் பயன்படுத்தி "Rhizosaara"வை உருவாக்குவதில் வெற்றி பெற்றுள்ளார்.

"Rhizosaara" வின் கண்டுபிடிப்பானது , விவசாய-தொழில்நுட்பத் துறையின் பாதையினையே மாற்றக்கூடியது, ஏனெனில், செயற்கை இரசாயன நச்சுகள் இல்லாத மற்றும் சுற்றுச்சூழல் நட்பு நுண்ணுயிர் செயல்பாடு மூலம் இலங்கை விவசாயிகள் உச்ச ரீதியில் உகந்த உற்பத்தியை அடைய இம்முறை ஏதுவாகிறது .

ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நிதி உதவி மற்றும் அவருடனான தொடர்ச்சியான தொடர்பு மற்றும் ஒரு வெற்றிகரமான தொழில்முனைவோராக மாற அவருக்கு வழங்கப்பட்ட வழிகாட்டுதல் ஆகியவை அவரது பயணத்தில் உள்ள தடைகளை கடக்க உதவியது.

"Rhizosaara" இன் கண்டுபிடிப்பின் மூலம் . இலங்கையில் தற்போதுள்ள பொசுப்பேற்று வைப்புக்கு கணிசமான பெறுமதி சேர்ப்பை உருவாக்க முடிந்துள்ளது, குறைவான கரைதிறன் காரணமாக முன்னர் குறுகிய கால பயிர் சாகுபடிக்கு பயன்படுத்த முடியாது இருந்த இந்த பொசுப்பேற்றானது, இப்போது நுண்ணுயிர் செயல்பாடுகளுடன், குறுகிய கால பயிர் சாகுபடிக்கு பரிந்துரைக்கப்பட்ட தயாரிப்பாக மாற்றப்பட்டுள்ளது என்பதுடன் இது கமத்தொழில் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கள சோதனைகள் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.நீண்ட கால (நான்கு ஆண்டுகால) கள சோதனைகளின் முடிவுகளின் மூலம் "Rhizosaara" ஆனது டிரிபிள் சூப்பர் பொசுப்பேற்றுக்கு (TSP) இணையான அறுவடையை தருவதாக கமத்தொழில் நிறுவனம் சான்றளித்துள்ளது.

இதன்படி, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் பயிரிடப்பட்ட 6000 ஏக்கர் நிலங்களுக்கு இந்த "Rhizosaara" தயாரிப்பைப் பயன்படுத்த விவசாயத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது. நடைமுறையில் பலன்களைக் காட்டி விவசாயியின் விளைச்சலை உறுதி செய்த "Rhizosaara" வானது, அதிகரித்து வரும் தேவைக்கு ஏற்ப உற்பத்தித் திறனை 20லிருந்து 100 டன்னாக உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிடமிருந்து 5.8 மில்லியன் ரூபா நிதியுதவியைப் பெற்ற வைத்தியர் துலித சிஹலிந்து ரன்வல/கண்டுபிடிப்பாளர், எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் தனது புதிய தொழிற்சாலையை விரைவில் திறக்கத் தயாராகி வருகிறார்.

வைத்தியர் . துலித ரன்வாலா ஏற்கனவே தனது உற்பத்தி முறைக்காக ISO 9001: 2015 ஐ பெற்றுள்ளார் மற்றும் கரிம உள்ளீடுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் சமீபத்திய ஆர்கானிக் சான்றிதழையும் பெற்றுள்ளார்.மற்றும் இந்த கரிம உள்ளீடுகளாவன ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கீழ் தேசிய கரிமக் கட்டுப்பாட்டுப் பிரிவில் (NOCU) கரிம உரமாகப் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்செயற்பாட்டின் வெற்றிக்கு பங்களித்த நேர் அமைச்சின் செயலாளர் மற்றும் ஊழியர்கள் மற்றும் கல்வி அமைச்சர் கௌரவ. கலாநிதி சுசில் பிரேமஜயந்த ஆகியோர்களினை பாராட்டுதல் வேண்டும். இது இலங்கையின் வெளிநாட்டு சந்தையின் எதிர்காலத்தை வெற்றிகொள்வதன் மூலம் அந்நிய செலாவணி நெருக்கடிக்கு வலுவான உறுதுணையாக அமையும் என நம்பப்படுகிறது. "Rhizosaara" இன் கண்டுபிடிப்பானது, மதிப்பு ஏற்றப்படாத, பொசுப்பேற்று வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் கலாசாரத்தினை மாற்றியமைக்கும் என்பதுடன்,அதிக அளவு அந்நிய செலாவணியை உருவாக்குவதற்கு மதிப்பு கூட்டப்பட்ட பாஸ்பேட் மற்றும் உருவாக்கப்பட்ட மதிப்பு கூட்டப்பட்ட கரிம இலங்கை உரங்களை ஏற்றுமதி செய்யும் கலாச்சாரத்தை

மாற்றும் என்பதுடன் பெருமளவிலான அந்நியச் செலாவணியை உருவாக்க கூடிய வகையில் இலங்கை சார் பசளைகளுக்கு பெறுமதியினை சேர்க்க உதவும்.

2.5.2 கண்டுபிடிப்பாளர் வைத்தியர். என்.ஆர். பி. நிஷ்ஷங்க - இயற்கை மூலிகையிலான நுளம்பு விரட்டி மற்றும் தைலம்

வைத்தியர். நிஷ்ஷங்கவிற்கு , கண்டுபிடிப்பின். உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக இயந்திரம் ஒன்றை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்காக ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 150,000/-) கடனுதவி சிபாரிசு செய்யப்பட்டுள்ளதுடன் கடன் செலுத்தப்படுவதற்கான கால வரையறை மூன்று (03) மாத காலம் ஆகும் .

இந்த தயாரிப்புகள் இலங்கையின் முன்னணி நவீன அங்காடி சங்கிலியான "SPAR Sri Lanka" க்கு அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது வெற்றிகரமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

.

2.6 கண்டுபிடிப்பாளர்களுக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்க நிறுவப்பட்ட தொழில்நுட்ப அடைகாக்கும் மையங்கள்

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாகுனர்கள் ஊக்குவிப்புச் சட்டத்தின்படி, ஆணைக்குழுவிற்குள் ஒரு ஆய்வுக்கூடத்தை பராமரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது அவசியமாகும், ஆனால் நிதிக் குறைபாடுகள் மற்றும் ஏற்கனவே நிறுவப்பட்ட வசதிகளை அதிகபட்சமாகப் பயன்படுத்துதல் வேண்டும் என்ற காரணத்தினால் மேற்கண்ட தேவையை நிறைவேற்ற மாற்று முறைகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இயந்திரங்கள், கட்டிடங்கள், மனித வளங்கள் போன்ற வளங்களைக் கொண்ட பல்கலைக்கழகம் அல்லது ஆராய்ச்சி நிறுவனம் போன்ற வசதியான இடத்தில் தொழில்நுட்ப அடைகாக்கும் மையங்களை நிறுவுவது அதன் படிகளில் ஒன்றாகும்.

அதன் ஊடாக இலங்கையின் கண்டுபிடிப்பாளர்களுக்கு அவர்களின் கண்டுபிடிப்புகளை மிகவும் வசதியாக மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஜா-அல தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ரஜரட்ட பல்கலைக்கழகம் மற்றும் ருஹுணு பல்கலைக்கழக வளாகங்களில் நான்கு (04) தொழில்நுட்ப அடைகாக்கும் நிலையங்கள் நிறுவப்பட்டன.

இதைவிட ,2022 ஆம் ஆண்டில் , இலங்கையின் வடமேற்கு பல்கலைக்கழகத்தில் ஒரு புதிய தொழில்நுட்ப மையம் நிறுவப்பட்டது, அதன் மூலம், இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்கும் பணிக்கான பாதை அமைக்கப்பட்டது.

இது இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கு அவர்களின் கருத்தியல் யோசனைகள் மற்றும் முதன்மை கண்டுபிடிப்புகளை தொழில்நுட்ப அடைகாக்கும் நிலையங்களின் தொழில்நுட்ப நிபுணர்களின் ஆதரவின் மூலம் சந்தைப்படுத்தக்கூடிய மற்றும் சிறந்த முறையில் கையாளக்கூடிய தயாரிப்புகளாக உருவாக்க உதவும்.






2.7 இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு மற்றும் பிரிட்டிஷ் கணினி சங்கம் (BCS) ஆகியவற்றின் கூட்டு வேலைத்திட்டம் - இலங்கை தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கான பட்டய நிறுவனம்

பொது-தனியார் பங்குடமை என்ற அடிப்படையில் , தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்காக ஆணைக்குழுவானது இலங்கை தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கான பட்டய நிறுவனமான பிரிட்டிஷ் கணினி சங்கத்துடன் (BCS) இணைந்து ஒரு கண்டுபிடிப்பு நிகழ்ச்சிச் திட்டமொன்றிற்கு ஏற்பாடு செய்தது. கோவிட்-19, வெள்ளம், பஞ்சம், வறட்சி போன்ற எந்த அனர்த்தங்களையும் கண்டறிந்து, தடுக்க, கட்டுப்படுத்த அல்லது நிவாரணம் வழங்க சமீபத்திய தகவல்,தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம் தயாரிப்புகள் மற்றும் கண்டுபிடிப்புகளை அடையாளம் காண்பதே இதன் முதன்மை நோக்கமாகும்.


இதன் வெற்றியாளர்கள்,தேசிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விருதுகளில் விருது வென்றவர்களாக அங்கீகரிக்கப்பட்டனர், மேலும் இது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப தொடர்பான சர்வதேச போட்டிகளில் இவர்கள் பங்கேற்பதற்கான பாதையினை வகுத்துள்ளது . எதிர்காலத்தில், இந்த கூட்டு செயற்பாடானது, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான புதிய கண்டுபிடிப்புக்களின் முன்னேற்றத்திற்கு பாதை வகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



2.8 விவசாய கண்டுபிடிப்புகளின் மதிப்பீடு மற்றும் ஊக்குவிப்புக்கான திட்டம்

2022.12.21 அன்று காப்புரிமை தொடர்பில் கண்டுபிடிப்பாளர்களுக்கு விழிப்புணர்வுவினை ஏற்படுத்தும் பொருட்டு zoom தொழில்நுட்பத்தின் மூலம் ஒரு நிகழ்ச்சித்திட்டமானது "விவசாய கண்டுபிடிப்பாளர்களை வெற்றிகரமான தொழில்முனைவோர்களாக மாற்றுவதற்கான திட்டம் - 2022" எனும் தலைப்பின் கீழ் விவசாய அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டது.

இதன் மூலம் தற்போது காப்புரிமைக்கு விண்ணப்பித்துள்ள கண்டுபிடிப்பாளர்கள் (நிலுவையில் உள்ள நிலை) மற்றும் காப்புரிமைக்கு விண்ணப்பிப்பதில் பின்பற்ற வேண்டிய நடைமுறை மற்றும் இது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சனைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றி நன்கு அறிந்து கொள்ள முடிந்தது.



2.9 அரச தனியார் பங்குடமை

பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் இணைந்து கண்டுபிடிப்புகளை உருவாக்கி வணிகமயமாக்குவது ஆணைக்குழுவின் கருதுகோள்களில் ஒன்றாகும். அதன்படி, அரசாங்க நிதியை நம்பி, கண்டுபிடிப்பாளர்களை ஆதரிப்பது என்ற கருத்துக்கு அப்பால், மற்றொரு கண்டுபிடிப்பை வணிகமயமாக்கும் திட்டத்தை தேசிய அபிவிருத்தி வங்கியுடன் (NDB PLC) ஆணைக்குழு வெற்றிகரமாக செயல்படுத்த முடிந்தது.

.

2021 ஆம் ஆண்டில், ஆணைக்குழு 25 கண்டுபிடிப்புகளுக்கு வாய்ப்பளித்து இந்தத் திட்டத்தை செயல்படுத்தியது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்த முன்வந்த கண்டுபிடிப்பாளர்களின் கோரிக்கைகள் மற்றும் சமர்ப்பிப்புகளின் அடிப்படையில், அக் கண்டுபிடிப்புக்களவான தேசிய அபிவிருத்தி வங்கிக்கு முன்வைக்கப்பட்டது. அவற்றுள் 2021 ஆம் ஆண்டில் 08 கண்டுபிடிப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டு, ஒரு (01) கண்டுபிடிப்புக்கு நிதி உதவி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ், தேசிய அபிவிருத்தி வங்கியானது (NDB PLC) 2022 ஆம் ஆண்டில் "EMSOL எரிபொருள் சேர்க்கை" கண்டுபிடிப்பிற்காக 500,000/- நிதி உதவியை வழங்கியது.

2.10 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களும் பயிற்சி பட்டறைகளும்

கண்டுபிடிப்புகள்/புத்தாக்கங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பயிலரங்குகளை நடத்தும் போது , பல்வேறு தரப்பினர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளுக்கும் தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த பயிலரங்குகள் மூலம், நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்கள் கண்டுபிடிப்பு பற்றி அறிந்து கொள்வதோடு, நடைமுறை அனுபவத்தையும் பெற வாய்ப்பு வழங்கப்படும்.

பாரம்பரிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போல் அல்லாது , கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கனகள் பற்றிய நடைமுறை அனுபவத்தைப் பெறும் வகையில் இந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, M/Koth/ டெல்டா கமுனுபுற உயர் பாடசாலை, R/ கங்கந்த இடைநிலை பாடசாலை, (தேசிய பாடசாலை), B/ கிராண்துருகோடே இடைநிலை பாடசாலை,மற்றும் தலாவ தேசிய பாடசாலை ஆகியவற்றில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சிகள் மூலம் 1000க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் அறிவினை பெற்றுக்கொண்டனர் .

2.11 இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கான இலத்தினியல் கற்கை நெறி

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு (SLIC) மற்றும் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனம் (ACCIMT) ஆகியன இணைந்து இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கு இலத்திரனியல் துறையில் 03 நாள் கற்கைநெறியை கற்பதற்கான வாய்ப்பை வழங்கியது.

இதன் கீழ் முதல் கட்டமாக, 15 இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கு அவர்களின் கண்டுபிடிப்புத் தேவைகளுக்கு உதவியாக இருக்கும் வகையில் இலத்திரனியலில் அடிப்படை விடயங்கள் பற்றிய அறிவைப் பெறுவதற்கான வாய்ப்பு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி திட்டமானது, நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தினால் (ACCIMT) ஏற்பாடு செய்யப்பட்டது மற்றும் கற்கைக்கான மொத்த கட்டணம் பதினைந்தாயிரம் ரூபாய் (15,000/-). இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, தேர்ந்தெடுக்கப்பட்ட கண்டுபிடிப்பாளர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் (10,000/-) மதிப்பிலான நிதியுதவியை வழங்கியது, கண்டுபிடிப்பாளர்கள் மிகுதி ஐயாயிரம் ரூபாயை வழங்கினர்.

2.12 இலங்கையின் புதிது கண்டுபிடிக்கும் கலாச்சாரத்தின் முன்னேற்றத்திற்காக இளம் கண்டுபிடிப்பாளர்கள் கழகங்களினை நிறுவுதல்

பாடசாலைகள் , பல்கலைக்கழகங்கள், மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்கள் போன்ற கல்வித் துறைகளில் புதிது கண்டுபிடித்தல் தொடர்பில் ஒரு ஈர்ப்பினை ஏற்படுத்தி புதிது கண்டுபிடித்தல் தொடர்பிலான கலாசாரத்தை உருவாகுவதற்கே, இந்த இடங்களில் கண்டுபிடிப்பாளர்கள் கழகங்கள் நிறுவப்படுகின்றன. 2022 ஆண்டில், பாடசாலை மட்டத்தில் 132 இளம் கண்டுபிடிப்பாளர்கள் கழகங்களும் பல்கலைக்கழக மட்டத்தில் 5 இளம் கண்டுபிடிப்பாளர்கள் கழகங்களும் நிறுவப்பட்டன.

கண்டுபிடிப்புக்களினை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல், தேவையான உபகரணங்களை வாங்குதல், கண்டுபிடிப்பு கண்காட்சிகள் மற்றும் விரிவுரைகள் போன்றவற்றை நடத்துதல் போன்ற கழகத்தின் செயல்பாட்டிற்கான உதவியாக, ரூ. 10,000.00 வழங்கப்பட்டுள்ளது.
இந்த இளம் கண்டுபிடிப்பாளர்கள் கழகங்களின் மூலம், ஆணைகுழுவின் வருடாந்திர திட்டங்களுடன் தொடர்ந்து இணைந்திருக்கும் கண்டுபிடிப்பாளர்களுக்கு அவர்களின் கண்டுபிடிப்புகளுக்கான அறிவுசார் சொத்துரிமைகளைப் பெறுவதற்குத் தேவையான வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு வழங்கப்படுகிறது. மேலும், கண்டுபிடிப்பாளர்களுக்கு, கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வு அமர்வுகள் மூலம் தங்கள் அறிவை மேம்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர், அத்துடன் கண்டுபிடிப்பை முதன்மைத் தரத்தில் இருந்து வெற்றிபெற மேம்படுத்தக்கூடிய தொழில்நுட்ப ஆதரவும் அவர்களுக்கு கிடைக்கப்பெறுகிறது. அதுபோன்று இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு தொடர்ந்தும் தேவையான ஆதரவை வழங்க தயாராக உள்ளது.


வயம்ப பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகம் அதுபோன்று இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் ஆகிய ஐந்து (05) பல்கலைக்கழகங்கள் இளம் கண்டுபிடிப்பாளர்கள் சங்கங்களை உருவாக்கி ஊக்குவித்துள்ளன.


2.13புதிய கண்டுபிடிப்புக்களினை பிரபல்யப்படுத்துவதற்கு “இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின்” YouTube அலைவரிசை மற்றும் முகப்புத்தக பக்கம்

Youtube மற்றும் சமூக ஊடகங்கள் போன்ற புதிய போக்குகளைப் பயன்படுத்தி பல்வேறு துறைகளிலும் கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்புகளினையும் அவர்களது அறிவுத் திறனையும் பகிர்ந்து கொள்ளும் வகையில் ஆணைகுழு செயல்படுகிறது. தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களின் உதவியுடன் இந்த கண்டுபிடிப்பினை வணிகமயமாக்கல் செயல்முறைக்கு உட்படுத்தவும் அதுபோன்று உலகத்துடன், புதிய தொழில்நுட்பங்களுக்கு அமைவாக முன்னோக்கி செல்வதற்கும் தேவையான பின்னணியை வழங்கவும் இது செயல்படுத்தப்பட்டது. இந்த Youtube அலைவரிசையானது , கண்டுபிடிப்பாளர்களுக்கு புது கண்டுபிடிப்புக்களினை பற்றி அறிந்து கொள்ளவும், எந்த நேரத்திலும் விரைவாக காப்புரிமைக்கு விண்ணப்பிக்கும் செயல்முறையைப் பற்றிய புரிதலைப் பெறவும் வசதிகளை வழங்குகிறது.


மேலும் இந்த அலைவரிசை மூலம், புத்தாக்க கலாச்சாரத்தை ஊக்குவித்தல், வளவாளர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் கண்டுபிடிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், புதிய தொழில்நுட்ப அறிவை வழங்குதல் மற்றும் பாடசாலை மாணவர்களிடையே அறிவு இடைவெளியைக் குறைத்தல் போன்ற பல சிறப்புப் பலன்களைப் பெறலாம்.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ” YouTube அலைவரிசையில் ஏற்கனவே 160க்கும் மேற்பட்ட காணொளிப்பதிவுகள் மற்றும் 1800 சந்தாதாரர்கள் உள்ளமை ஒரு திருப்திகரமான முன்னேற்றம் ஆகும்





“இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ” YouTube அலைவரிசையில் ஏற்கனவே 160க்கும் மேற்பட்ட காணொளிப்பதிவுகள் மற்றும் 1800 சந்தாதாரர்கள் உள்ளமை ஒரு திருப்திகரமான முன்னேற்றம் ஆகும்



இலங்கைஇலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் முகப்புத்தக பக்கமானது, 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 6,900 சந்தாதாரர்களாக வளர்ந்துள்ளது. இதன் மூலம், கண்டுபிடிப்புகள்/ புத்தாக்கங்களினை ஊக்குவிப்பது மிகவும் திறமையாக இடம் பெறுகிறது.



குறிப்பிட்ட ஒரு கண்டுபிடிப்புக்கான சர்வதேச காப்புரிமை அல்லது காப்புரிமை ஒத்துழைப்பு ஒப்பந்தத்தினை (PCT) பெறுவதற்கான செலவீனமாக தாம் செலவழித்த தொகையைக் ஆணைக்குழு கருத்தில் கொள்ளாது. அதற்கு பதிலாக, அந்நியச் செலாவணி என்ற வகையில் நாட்டிற்குத் திரும்பக் கிடைக்கக்கூடிய முதலீடாகவே ஆணைக்குழு கருதுகிறது, இது பொது நிதியம் சரியான முறையில் பயன்படுத்தப்படுவதாகவும் கருதப்படுகிறது .

2.16 புதுக்கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக நடப்பு சமூக பிரச்சனைகளுக்கு தீர்வு

2.16.1 புது முறையான தீர்வுகள் மூலம் மனித-வனவிலங்கு மோதல்களைக் குறைப்பதற்கான திட்டங்கள்

வனவிலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான பிரச்சினைகளைக் குறைப்பதற்கு நிலையான தீர்வுகளை வழங்கும் நோக்கத்துடன் 2021 ஆம் ஆண்டு ஆணைக்குழுவினால் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டது, இது தற்போது பொதுவான பிரச்சினையாக மாறியுள்ளது.

மனித-வனவிலங்கு மோதல்களால் உள்ளூர் பொருளாதாரத்திற்கு ஏற்படும் சேதம் அளப்பரியது ஆகும். இந்த மோதல்களைக் குறைக்க, தேவையான தொழில்நுட்ப உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு ஆண்டுதோறும் அதீத பணம் செலவிடப்படல் வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்கு புது முறையில் தீர்வுகளை வழங்குவதன் மூலம் உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்தும் அதே வேளையில் மனித-வனவிலங்கு மோதல்களுக்கு நீண்டகால மற்றும் நிலையான தீர்வுகளை வழங்குவதற்காக ஆணைக்குழுவால் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டு முதல் மகாவலி பிரதேசங்களில் மனித மற்றும் வனவிலங்குகளுக்கு இடையிலான முரண்பாடுகளைக் குறைப்பதற்காக, இலங்கை மகாவலி அதிகாரசபையுடன் இணைந்து, தற்போதுள்ள மின்சார வேலிகளை உள்ளூர் கண்டுபிடிப்புகளுடன் இயக்குவதன் மூலம் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.. இதன் முக்கிய நோக்கமானது, உள்ளூர் கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குதல் மற்றும் வனவிலங்குகளால் ஏற்படும் பயிர் சேதம் உள்ளிட்ட சொத்து சேதங்களால் உள்ளூர் பொருளாதாரத்திற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் இழக்கப்படும் வளங்களின் அளவைக் குறைப்பதும் ஆகும் .

இந்த நோக்கங்களின் அடிப்படையில், 2022 ஆம் ஆண்டில், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, இலங்கை மகாவலி அதிகார சபையுடன் இணைந்து "கரபொல –

கந்தகாடு - சிங்கபுர" ("Karapola - Kandakadu - Sinhapura")எனப்படும் இரண்டாவது முன்னோடித் திட்டத்தை மகாவலி "பி" வலயத்தில் நடைமுறைப்படுத்தியது. சுமார் 14 கிமீ நீளத்துடன் கூடியதும் உள்ளூர் கண்டுபிடிப்புகள் மூலமும் செய்யப்பட்ட இந்த பாதுகாப்பு முறை, தற்போது வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2.16.2 இளம் கண்டுபிடிப்பாளர் - தொழில்முனைவோர் முன்னணி மேம்பாட்டுத் திட்டம் - YIELD

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, உலகப்புகழ்பெற்ற சீமன் எனப்படும் ஜேர்மன் நிறுவனத்தின் உள்ளூர் பிரதிநிதியான வரையறுக்கப்பட்ட பனாசிய சொலுசன் தனியார் நிறுவகத்துடன் இணைந்து, பாடசாலைகளில் உள்ள புத்தாக்க திறன்களை மேம்படுத்தும் நோக்கில், "இளம் கண்டுபிடிப்பாளர் - தொழில்முனைவோர் முன்னணி அபிவிருத்தி" எனப்படும் நிகழ்ச்சித்திட்டத்தினை உருவாக்கியுள்ளது. இது கணினி மென்பொருளைப் பயன்படுத்தி கண்டுபிடிப்புகளை உருவாக்கும் திட்டம் ஆகும் .இதன்படி, உலகில் உள்ள நவீன தொழில்நுட்பம், செயல்பாட்டைச் சோதித்து, முப்பரிமாண அச்சிடல் பொறிகளினை பயன்படுத்தி உண்மையான வடிவமைப்பாக மாற்றுதல் ஆகும் . நிகழ்ச்சியை கண்டுபிடிப்பு போட்டியாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



இந்த இலவச கணினி மென்பொருளைப் பயன்படுத்துவதன் மூலம். கணணி மென்பொருள் கூறுகளின் செலவினம், இயந்திரங்களின் உற்பத்தி செலவினம்ஆகியவை குறைகின்றது.

விலையைச் சேமிக்கிறது. செயல்பாட்டைச் சரிபார்த்து கண்டுபிடிப்பை மீண்டும் மீண்டும் மேம்படுத்தும் திறனால் கண்டுபிடிப்பாளரின் பணத்தையும் நேரத்தையும் மிச்சப்படுத்துவது நவீன தொழில்நுட்பத்தின் தனித்துவமான அம்சமாகும்.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது இந்த மென்பொருளைப் பயன்படுத்தி ஒரு கண்டுபிடிப்பை எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்து பாடசாலை மாணவர்களுக்கு வழிகாட்டி, அது தொடர்பான போட்டியை நடத்த திட்டமிட்டுள்ளது .

அதன்படி, 2021 ஆம் ஆண்டில் கோவிட் தொற்றுநோயை எதிர்கொள்ளும் வகையில், ஒன்பது மாகாணங்களை உள்ளடக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நிகழ்நிலை(online) முறை மூலம் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, கணினி மென்பொருளைப் பயன்படுத்தி புதிய வடிவமைப்பு பற்றிய ஆறு (06) காணொளிகள் எங்கள் YouTube அலைவரிசையில் வெளியிடப்பட்டன. 2022 ஆம் ஆண்டில், ஒவ்வொரு மாகாணத்தையும் உள்ளடக்கிய வகையில் புத்தாக்கம் பற்றிய பதினைந்து (15) விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன, மேலும் கணினி மென்பொருளைப் பயன்படுத்தி எவ்வாறு புதிய கண்டுபிடிப்புக்களினை உருவாக்குவது என்பது குறித்த மற்றொரு காணொளி எங்கள் YouTube அலைவரிசையில் வெளியிடப்பட்டது.

போட்டிக்காக ஆரம்பத்தில் சுமார் 700 வடிவமைப்பு யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன, மேலும் 80 கண்டுபிடிப்புகள் கணினி மென்பொருளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டன.

2.17 புத்தாக்கங்களுக்கு சனாதிபதி விருது

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கு முறையான அங்கீகாரம் வழங்கி அவர்களின் கண்டுபிடிப்புகளை பிரபலப்படுத்தும் மற்றும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் புத்தாக்கங்களுக்கான ஜனாதிபதி விருதுகள் நிகழ்ச்சித்திட்டத்தினை நடத்துகிறது.

“புத்தாகங்களுக்கான ஜனாதிபதி விருதுகள்” நிகழ்ச்சித் திட்டமானது, இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் நிமித்தம் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படும் ஒரு சிறப்புச் செயலாகும், மேலும் அவர்களின் கண்டுபிடிப்புக்காக அறிவுசார் சொத்துரிமை (காப்புரிமை) பெற்ற கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்புகளைப் பாராட்டி ஆண்டுதோறும் இவ்விருதுகள் வழங்கப்படும். தேசிய அறிவுசார் சொத்து அலுவலகத்தால் ஆண்டுதோறும் வழங்கப்படும் காப்புரிமை அடிப்படையில் போட்டிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன அத்துடன், பொது பாதுகாப்பு, நலன் மற்றும் தேசிய பாதுகாப்பு - உணவு தொழில்நுட்பம் - மருத்துவம் மற்றும் மருந்தகம் - பொதுப்பணி மற்றும் உள்கட்டமைப்பு எந்திரவியல் - தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் – பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்- சுற்றுச் சூழல் பேணுகை -இரசாயனவியல் – பாரம்பரிய மருத்துவம்-பௌதீகவியல்-விவசாயம்-சக்தி-போக்குவரத்து – எந்திரவியல் போன்ற 14 ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நடுவர்கள் குழுவால் மதிப்பீடு பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

நடுவர் குழுவின் முடிவின்படி, ஒவ்வொரு தொழில்நுட்பத் துறையிலும் தீர்ப்பு வழங்குவதற்கான அளவுகோல்களை பூர்த்தி செய்யும் கண்டுபிடிப்புகளுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம் மற்றும் தகுதிக்கான விருதுகள் வழங்கப்படுகின்றன. மேலும், இந்தத் தொழில்நுட்பத் துறைகளில் அதிக திறன் கொண்ட கண்டுபிடிப்புக்கு ஆண்டின் சிறந்த கண்டுபிடிப்பு என்பது வழங்கப்படும்..

அதன்படி, 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்புகளினை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் இந்த ஆண்டு டிசம்பர் 01 முதல் தொடங்கப்பட்டன. 2017 ஆம் ஆண்டிற்கான கண்டுபிடிப்புகள் 30, 2018 ஆம் ஆண்டில் 38, 2019 ஆம் ஆண்டில் 27 மற்றும் 2020 ஆம் ஆண்டுக்கு 40 கண்டுபிடிப்புகள் என மொத்தம் 135 கண்டுபிடிப்புகள் மதிப்பீட்டிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. நாற்பத்தி இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட முழு நடுவர் குழுவிற்கும் டிசம்பர் 1-ம் தேதி முன் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

டிசம்பர் 27 ஆம் திகதியன்று "போக்குவரத்து", 29 ஆம் திகதியன்று "இரசாயனவியல் " மற்றும் 30 ஆம் திகதியன்று " பௌதீகவியல் " ஆகிய மூன்று தொழில்நுட்ப துறைகளில் மதிப்பீடுகள் நிறைவடைந்தன. மற்ற தொழில்நுட்ப துறைகளில் மதிப்பீடுகள் வரும் நாட்களில் தொடரும்.

இந்த ஆண்டின் சிறப்பு என்னவெனில், ஒரு கண்டுபிடிப்பை மதிப்பிடும் முந்தைய முறையைத் தவிர, உள்ளூர் பொருளாதாரம் மற்றும் கண்டுபிடிப்பாளருக்கு பயனுள்ளதாக இருக்கும் கண்டுபிடிப்புகளை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.18 கண்டுபிடிப்பாளர்களினை சந்தித்தல்

கண்டுபிடிப்பாளர்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளல் மற்றும் ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் சமீபத்திய வேலைத்திட்டங்கள் குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கும் நோக்கில், கண்டுபிடிப்பாளர்களுடனான சந்திப்பு 28.09.2022 அன்று இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

2.19 விஞ்ஞான தினத்தினை கொண்டாடுதல்

2022,நவம்பர் 10 முதல் 16, வரையான விஞ்ஞானவாரத்துடன் இணைந்து, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களின் முன்னேற்றத்திற்காக தொடர்ச்சியான திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

அதன்படி, 11.11.2022 அன்று ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் (NERDC) நிறுவப்பட்ட தொழில்நுட்ப அடைகாப்பக நிலையத்தின் மூலம் கண்டுபிடிப்பாளர்களுக்கு கிடைக்கும் ஆதரவு தொடர்பான செயலமர்வு நடைபெற்றது



2.20 ஆணைகுழுவினை சர்வதேச ரீதியில் அங்கீகரித்தல்

இலங்கையின் புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, இரண்டு சர்வதேச சங்கங்களில் உறுப்பினராக உள்ளது, அவையாவன,சர்வதேச கண்டுபிடிப்பாளர்கள் சங்கம் (IFIA) மற்றும் உலக கண்டுபிடிப்புகள் மற்றும் அறிவுசார் சொத்துரிமை சங்கம் (WIIPA), இவை உலகளவில் கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கங்களினை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் ஆகும். இதன் மூலம் ஆணைக்குழுவின் சர்வதேச மட்டத்திலான உறவுகள் மேலும் வளர்ச்சியடைந்துள்ளன.

இந்த அங்கத்துவங்களைப் பெறுவதன் மூலம், சர்வதேச கண்டுபிடிப்புப் போட்டிகளில் இளைஞர்கள், திறந்தவெளி, பெண்கள் போன்ற பல்வேறு பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல பங்கேற்கும் அரிய வாய்ப்பை இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு பெற்றுள்ளது. இந்த நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் எனும் பொது அதற்குள். பயிற்சித் திட்டங்கள், கண்டுபிடிப்புகளின் வணிகமயமாக்கல், அறிவுசார் சொத்துரிமைகளைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழலுக்கு உகந்த கண்டுபிடிப்புகளை

ஊக்குவித்தல் மற்றும் கண்டுபிடிப்புகள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களின் திட்டங்களுக்கு அவர்களின் இணையதளங்கள் ஊடாகவும் அத்துடன் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் போன்ற அச்சு ஊடகங்கள் மூலம் விளம்பரம் வழங்குதல் ஆகியவை அடங்கும். மேலும் கண்டுபிடிப்புகள் பற்றிய சமீபத்திய தகவல்கள் பரப்பப்படுகின்றன. வெற்றி பெறும் கண்டுபிடிப்புகளுக்கு பதக்கங்கள் மற்றும் பரிசுகளும் வழங்கப்படும்.

அதுமட்டுமின்றி, விமான டிக்கெட்டுகள், போட்டிகளுக்கான தங்குமிட வசதிகள், கண்டுபிடிப்பு கண்காட்சிகளுக்கான பதிவு, கண்காட்சி அரங்குகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல் போன்றவை தொடர்பிலும் ஆதரவு வழங்கப்படுகிறது. இலங்கையின் கண்டுபிடிப்பாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் தமது கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குவதற்கு கிடைக்கப்பெறும் இந்த ஊக்குவிப்புக்கள் மற்றும் அங்கீகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கும் பெரும் பாக்கியமாகும்.

இந்த சர்வதேச சங்கங்களின் உதவியுடன், சர்வதேச புத்தாக போட்டியான சஹசக் நிமவும் போட்டியில் வெற்றி பெற்றவர்கள், ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும் வசதிகள் மூலம் உலகம் முழுவதும் நடத்தப்படும் சர்வதேச புத்தாக்க போட்டிகளின் அனுபவத்தைப் பெற தகுதியுடையவர்கள் ஆகின்றனர் .

2.21 தேசிய புத்தாக்குனர் தினம்

அக புத்தாக்குனர்களினால் ஆற்றப்படும் பணியின் நிமித்தம் அவர்களினை கௌரவிக்கும் நோக்குடன், அவர்களுக்காக ஒரு தினமானது, அதாவது தேசிய புத்தாக்குனர் தினமானது ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி என அமைச்சரவையின் அனுமதியுடன் 2016 ஆம் ஆண்டிலிருந்து பகிரங்கமாக பிரகடனம் செய்யப்பட்டது. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் முதலாவது ஆணையாளரும், மிகச் சிறந்த சிவில் பொறியியலாளர், கண்டுபிடிப்பாளர் மற்றும் பல பொறியியல் நிறுவனங்களை நிறுவியவருமான கலாநிதி ஏ.என்.எஸ்.குலசிங்க அவர்களின் பிறந்த தினம் என்பது இந்த நாளின் தனிச்சிறப்புஆகும் .

2.21.1 தேசிய புத்தாகுனர் தினம் தாபிக்கப்பட்டதன் நோக்கு

- கண்டுபிடிப்பாளர்களை மதிப்பிடுவதற்கு புதிய திட்டத்தை உருவாக்கி, அவர்களை ஊக்குவிப்பதன் மூலம் புத்தாகத்தினை அடிப்படையாக கொண்ட பொருளாதாரத்தை நோக்கி நாட்டை வழிநடத்தல் .
- புத்தாக்குனர் தினத்தை அறிவித்து அத்தினத்தில் புதிய முதலீட்டு வாய்ப்புகளை வழங்குவதற்கு கண்டுபிடிப்பாளர்களுக்கு வழங்கல் .
- புத்தாக்கத்தின் மூலம் அபிவிருத்தி அடைந்த பொருளாதாரத்தை அடைவதற்கு இலங்கையின் கண்டுபிடிப்பாளர்களுக்கு முன்னுரிமை அளித்தல்
- புதிய கண்டுபிடிப்புக்களினை உருவாக்க மக்களை ஊக்குவிக்கும் அணுகுமுறை.
- கண்டுபிடிப்பாளர்களுடன் மிகவும் நெருக்கமாக பணியாற்ற ஆணைக்குழுவிற்கு ஒரு வாய்ப்பு.
- விருது பெற்ற கண்டுபிடிப்பாளர்களுக்கு அங்கீகாரம் வழங்கல்.

2.22 இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு -ஹுவாவி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப போட்டி -தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய புத்தாக்க போட்டி

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு மற்றும் வரையறுக்கப்பட்ட ஹுவாவி டெக்னோலொஜி லங்கா நிறுவகம் (Huawei Technologies Lanka Company (Pvt) Ltd) ஆகியவை இணைந்து பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் தகவல் தொழில்நுட்ப அறிவை அதிகரித்து அந்த துறையில் புதிது கண்டுபிடிக்கும் பணிகளுக்கு அவர்களை வழிநடத்தும் நோக்கில் தகவல் தொழில்நுட்ப புத்தாக்க போட்டியை ஏற்பாடு செய்துள்ளன. இதன் முதல் கட்டமாக, மாணவர்களுக்கு போட்டி குறித்து தெரிவிக்கப்பட்டு, நிகழ்ச்சியானது 04.01.2022 அன்று நடைபெற்றது. 12.02.2022 அன்று நடைபெற்ற இப்போட்டியில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களின் மதிப்பீடு 09.03.2022 அன்று ஹுவாவி டெக்னோலொஜி நிறுவக வளாகத்தில் நடைபெற்றது.




2.23 கண்டுபிடிப்புக்களினை ஊக்குவிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் வேறு நிகழ்ச்சித்திட்டங்கள்

2.23.1 "இலங்கை புத்தாக்குனர்களுக்கான " You Tube பக்கம்

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விளம்பரம் மற்றும் வணிகமயமாக்கலுக்கான உதவிகளை வழங்குவதற்காக, கண்டறியப்பட்ட சாத்திய தன்மையினதான கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கங்களுக்கான காணொளிகள் தயாரிக்கப்பட்டு You Tube அலைவரிசையில் வெளியிடப்பட்டுள்ளன. 1200 வெற்றியாளர்கள் உட்பட 100க்கும் மேற்பட்ட காணொளிகள் அலைவரிசையில் சேர்க்கப்பட்டுள்ளன.

சமீபத்தில் இந்தத் துறையில் நுழைந்த கண்டுபிடிப்பாளர்கள் காப்புரிமை வரைவு பற்றிய விரிவாஅறிவைப் இந்த அலைவரிசை மூலம் பெறலாம்.



2.23.2உத்தியோகபூர்வ இணையத்தளம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமானது, திறம்பட மறுவடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. கண்டுபிடிப்பாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் புது கண்டுபிடிப்புக்களினை விரும்பும் இலங்கை சமூகம் ஆகியோருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும் வகையில் பரந்த அளவிலான சேவைகளை வழங்குவதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.தொழில் சார்ந்த விஷயங்களுக்கு புது முறையிலான தீர்வுகளைத் தேடுபவர்களுக்கு ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்பின் கீழ் கண்டுபிடிப்பாளர்களுடன் இணைவதற்கான வாய்ப்பையும் இந்த தளம் கொண்டுள்ளது.



2.24 ஊடகத்தின் பங்களிப்பு

இலங்கையில் புத்தாக்க கலாசாரத்தை உருவாக்குதல் என்ற வகையில், உள்ளூர் கண்டுபிடிப்புகளை பிரபலப்படுத்த வேண்டிய தேவையை பூர்த்தி செய்வதில் ஊடக செயற்பாடுகளுக்கு தனித்துவமான இடம் உண்டு. எனவே, இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழு எப்போதும் விளம்பர ஊடகங்களுடன் (மின்னணு, அச்சு மற்றும் சமூக ஊடகங்கள் போன்றவை) ஒருங்கிணைந்து செயற்படுவதுடன் புதுமைகளை ஊக்குவிக்க ஊடகங்களின் தன்னார்வ ஆதரவைப் பெறுவதற்கும் ஏற்ற வகையில் பணியாற்றுகிறது.

2022 ஆம் ஆண்டில், பல ஊடக நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, கண்டுபிடிப்புகளை விளம்பரப்படுத்த ஆணையத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி, "அக்ஷரா" PEO TV அலைவரிசையுடன் இணைந்து மூன்று (03) நிகழ்ச்சிகளை நடத்தியது

2.25 இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு - SPAR – இலங்கை கருத்திட்டம்

புத்தாக்க அடிப்படையிலான பொருளாதாரத்தை நோக்கி நகர்வதே தற்போதைய அந்நிய செலாவணி பிரச்சனைக்கு மிகவும் பொருத்தமான தீர்வாகும். உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களை அடையாளம் கண்டு, அந்த தயாரிப்புகளை மேம்படுத்துவதற்கு ஆதரவை வழங்குவதன் மூலமும், அவர்களுக்கான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கான அணுகலைத் தயாரிப்பதன் மூலமும் இந்தத் தீர்வை உண்மையாக்க ஆணைக்குழு செயல்படுகிறது. கண்டுபிடிப்பாளர்களை தொழில்முயற்சியாளர்களாக மாற்றுவதன் மூலம் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் முக்கிய நோக்கங்களை அடைந்து அதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு நேரடியாக பங்களிப்பை வழங்குவதன் மூலம் இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் பங்களிப்பு செய்ய முடிந்துள்ளமை மகிழ்ச்சியை அளிக்கிறது.

இதன் ஆரம்ப கட்டமாக, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு மற்றும் SPAR Sri Lanka (SPAR-Sri Lanka) - பல்பொருள் அங்காடி சங்கிலியுடன் இணைந்து உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்புகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தும் புதிய திட்டம் 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தலவத்துகொடையில் அமைந்துள்ள SPAR Sri Lanka - பல்பொருள் அங்காடித் தொடரின் பிரதான கிளையில் இது திறந்து வைக்கப்பட்டதுடன், கல்வி அமைச்சின் செயலாளர் திரு.நிஹால் ரணசிங்க உட்பட அரச அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். ஆரம்ப கட்டத்தில் நான்கு (04) கண்டுபிடிப்பாளர்களின் பதினான்கு (14) தயாரிப்புகள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. தற்போது இலங்கையில் பத்து (10) SPAR Sri Lanka பல்பொருள் அங்காடி கிளைகள் உள்ளன, மேலும் உலகெங்கிலும் 48 நாடுகளில் 13,600 க்கும் மேற்பட்ட கிளைகள் தற்போது செயல்படுகின்றன, எனவே உள்ளூர் தயாரிப்புகள் வெளிநாட்டு சந்தைகளில் "Made in Sri Lanka" என்ற வர்த்தக நாமத்தின் கீழ் பிரபலமாக உள்ளன. இதுவே இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ஒரே நோக்கமாகும்.









2.26 மனித வள அபிவிருத்தி

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு என்பது உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களுக்கு அதிகபட்ச சேவையை வழங்கும் ஒரு சிறந்த பணியில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனமாகும். ஆதலினால் ,கண்டுபிடிப்பாளர்களுக்கு உயர் தரமான மற்றும் திறமையான சேவையை வழங்குவதற்காக பணியாளர்களின் தரம் மற்றும் திறன்களை அதிகரிப்பது அவசியம். அதன்படி, பாட வாரியாக பல்வேறு பயிற்சித் திட்டங்களுக்கு பணியாளர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

நிகழ்ச்சிதிட்டங்களின் விபரங்கள் வறுமாறு .

- திறன் அபிவிருத்தி நிதியத்தால் நடத்தப்பட்ட "தரவு பகுப்பாய்வுக்கான Microsoft Excel பயிற்சி" தொடர்பான செயலமர்வில் ஆணைக்குழுவின் மூன்று அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

- திறன் அபிவிருத்தி நிதியத்தால் நடத்தப்பட்ட "திட்ட மேலாண்மை" பற்றிய நிகழ்நிலை அடிப்படையிலான பயிலரங்கில் ஆணையத்தின் அதிகாரி ஒருவர் பங்கேற்றார்.

- ஆணைக்குழுவின் பணிப்பாளர் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட "கூட்டுறவு நிதியின் பொறியியலாளர் அடிப்படைக்கான நிதியம்" என்ற பாடநெறியில் பங்குபற்றினார்.

- திறன் அபிவிருத்தி நிதியத்தால் நடத்தப்பட்ட "தனிப்பட்ட கோப்புகளைப் பராமரித்தல்" குறித்த பயிலரங்கில் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் கலந்துகொண்டார்.

- நிகழ்நிலை தொழில்நுட்பத்தின்.(online technology) மூலம் திறன் அபிவிருத்தி நிதியத்தால் நடத்தப்பட்ட "அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ உதவி அலுவலர்களின் தொழில்சார் மேம்பாடு தொடர்பான செயலமர்வில்" ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் கலந்துகொண்டார்.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதியியல் நிலைமை பற்றிய கூற்று

	குறிப்பு	2022 இல. ரூபா.	2021 இல. ரூபா.
சொத்துக்கள்			
நடப்புச் சொத்துக்கள்			
காசும் வங்கி மீதியும்	1	**67,662,970**	62,331,856
பண்டிகை முற்பணம்		**1,250**	1,250
கடன்பட்டோர்	2	**15,337,063**	11,396,880
தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையிடமிருந்து பெறப்பட வேண்டியவை		**7,560**	7,560
வேறு முற்பணம்		**136,633**	136,633
முற்கொடுப்பனவு	3	**520,856**	1,468,653
(கழிக்க ஐயக்கடன் (ஒதுக்கீடு (100%)	4	**(9,602,964)**	(9,602,964)
ஏனைய பெறுகைகள்		**167,930**	-
மீளளிக்கத்தக்க வைப்புகள்	5	**2,407,000**	2,407,000
அனர்த்த கடன்		**805,962**	917,399
கொவிட் 19 நிகழ்ச்சித்திட்டம் பற்றிய கடன்கள்		**646,960**	722,718
இலங்கை புத்தாக்குனர் நிதியத்திடமிருந்து கடன்கள்		**754,820**	707,548
IAFM-SL கடன்		**2,660,400**	4,500,000
எரிபொருள் வைப்பு		**100,000**	100,000
டீ சேர்ட் - இருப்பு	6	**320,280**	414,480
காகிதாயிகள் இருப்பு	6	**595,115**	386,860
		82,521,835	**75,895,873**
நடப்பல்லாத சொத்துக்கள்			
இலங்கை புத்தாக்குனர் நிதியத்திடமிருந்து கடன்கள்		**1,180,141**	1,737,658
கொவிட் 19 நிகழ்ச்சித்திட்டம் பற்றிய கடன்கள்		**-**	237,729
IAFM-SL கடன்		**3,672,600**	1,500,000
அனர்த்த கடன்		**2,499,927**	2,953,058
சொத்து மற்றும் கருவிகள்	7	**39,780,730**	47,349,863
		47,133,398	**53,778,308**
மொத்த சொத்துக்கள்		**129,655,233**	**129,674,181**
நிதியம் மற்றும் பொறுப்புக்கள்			
நடப்பு பொறுப்புக்கள்			
கடன் கொடுத்தோர்	8	**2,160,664**	1,316,664
நிலுவை செலவினங் கள்	9	**7,146,531**	2,201,973
		9,307,195	3,518,637
நடப்பல்லாத பொறுப்புக்கள்			
மகாவலி கருத்திட்ட ஒதுக்கீட்டு	10	**6,558,705**	6,534,026
பணிக்கொடை ஒதுக்கீடு	11	**4,423,824**	4,268,344
IAFM-SL	12	**36,472,155**	36,472,155
தேசிய அடைகாப்பக நிலைய நிதியம்	13	**30,426,293**	37,921,883
Government Capital Grant	14	**5,304,071**	9,905,989
இலங்கை புத்தாகுனர் நிதியம்	15	**12,837,184**	12,837,184
மொத்த பொறுப்புக்கள்		**105,329,427**	**111,458,217**
தேறிய சொத்துக்கள்		**24,325,806**	**18,215,964**
தேறிய சொத்துக்கள்/உரிமையண்மை			
திரட்டப்பட்ட நிதியம்		**2,825,806**	(3,284,036)
மீள்மதிப்பீட்டு மிகை		**21,500,000**	21,500,000
மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமையாண்மை		**24,325,806**	**18,215,964**

முக்கிய கணக்கியல் கொள்ககைகள் மற்றும் நிகிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என் பன இந்த நிகிக்கூற்றுக்களுடன் இகணக்கப்பட்டுள்ளன. பக்கங் கள் 39-41.

டி.எ. சரத்சந்திர
உதவிப் பணிப்பாளர் (நிதியியல்)

என்.என்.டபிள்யு. தொலவத்தை
பணிப்பாளர்/சிரேட்ட நிறைவேற்று அலுவலர்

இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரித்து முன்னளிப்பு செய்தல் பணிப்பாளர் பொறுப்பாகும்.
இந்த நிதிக்கூற்றுக்களாவன, பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதுடன் அவர்கள் சார்பில் கையொப்பமிடப்பட்டுள்ளது.

பேரா. என்.எம்.எஸ் . சிரிமுது
ஆணையாளர்

திருவதி. கல்பனி ராஜபக்ச
உதவி ஆணையாளர்

கலாநிதி . R. M. H.M. A. I. ஹேரத்
உதவி ஆணையாளர்

பெப்ரவரி 23/2023
கொழும்பு.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதியியல் செயலாற்றுகை பற்றிய கூற்று

	குறிப்பு	2022 இல. ரூபா.	2021 இல. ரூபா.
வருமானம்			
அரச பங்களிப்பு			
- நடப்பு	16	49,400,000	40,370,000
- கருத்திட்டம்நிகழ்ச்சித் திட்டம்/	20	9,018,748	10,107,926
- செயற்றிறன் நிர்மாணம்		85,500	533,750
மூலதன மானியம் கடன் தீர்வு நிலையான சொத்துக்கள் -	7	5,567,670	1,686,650
அடைகாப்பக நிதிய கடன் தீர்வு இயந்திரம் -, கருவிகள்	7	7,495,590	7,495,590
ஏனைய வருமானம்	17	1,638,282	1,243,843
மொத்த வருமானம்		**73,205,790**	**61,437,759**
செலவினங்கள்			
தனி ஆள் வேதனாதிகள்	18	20,692,859	19,424,172
நிர்வாகம் மற்றும் தாபிப்பு செலவினங்கள்	19	24,871,009	25,010,573
பெறுமானத் தேய்வு - நிலையான சொத்துக்கள்	7	13,063,259	9,182,240
பணிக்கொடை	11	554,030	585,730
புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினம்	20	9,018,748	10,107,926
ஏனைய செலவினங்கள்	21	13,436	560,943
மொத்த செலவினம்		**68,213,341**	**64,871,583**
வருடத்திற்கான மிகை(நட்டம்)/		**4,992,449**	**(3,433,824)**

முக்கியமான கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என் பன இந்த நிதிக் கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பக்கங்கள் 39-41.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
உரிமையாண்மையில் மாற்றம் பற்றிய கூற்று

	குறிப்பு	மீள் பெறுமான மிகை இல. ரூபா.	திரட்டப்பட்ட நிதியம் இல. ரூபா.	மொத்த ஒப்புரவு இல. ரூபா.
2021 ஜனவரி 01 இல் உள்ளவாறான மிகுதி		-	149,787	149,787
2021 ஆம் ஆண்டிற்கான மிகை/(நட்டம்)		-	(3,433,824)	(3,433,824)
வாகனங்கள் மீள்மதிபீட்டு		21,500,000	-	21,500,000
2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி		21,500,000	(3,284,037)	18,215,962
முன்னைய வருட சீராக்கல் - 2021				
நிலுவை செலவுகள் திருத்தம்		-	(3,272,372)	(3,272,372)
பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மூலம் கிடைத்த காசோலை				
புத்தாக்கம் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் – திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்		-	49,520	49,520
முற்பன கொடுப்பனவு திருத்தம்			(50)	(50)
பெறுமானத்தேய்வு விதிப்பனவு திருத்தம்		-	(10,467)	(10,467)
பாவனைக்காலம் திருத்தம்		-	4,134,762	4,134,762
2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி (மீள் குறிப்பீடு)		**21,500,000**	**(2,382,643)**	**19,117,355**
2022 ஜனவரி 01ஆம் திகதியில் உள்ளவாறான மிகுதி		21,500,000	(2,382,643)	19,117,357
காசோலை இரத்து			216,000	216,000
2022 ஆம் வருடத்திற்கான மிகை/(நட்டம்)		-	4,992,449	4,992,449
2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி		**21,500,000**	**2,825,806**	**24,325,806**

முக்கியமான கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என் பன இந்த நிதிக் கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பக்கங்கள் 39-41.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான காசோட்டக் கூற்று

	குறிப்பு	2022 இல. ரூபா.	2021 இல. ரூபா.
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்			
மிகை/(நட்டம்)		4,992,449	(3,433,824)
காசல்லாத பெயர்ச்சிகள்			
பெறுமான தேய்வு	7	13,063,259	9,182,240
கருத்திட்டங்கள்/நிகழ்ச்சித்திட்டங்கள் மூலதன மானியத்தில் பிற்போடப்பட்ட வருமானம்	20	(9,018,748)	(10,107,926)
பதவியணி செயற்றிறன் நிர்மாணத்தில் பிற்போடப்பட்ட வருமானம்		(85,500)	(533,750)
மூலதன மானிய கடன் தீர்வு - நிலையான சொத்துக்கள்		(13,063,259)	(9,182,240)
பணிக்கொடை ஒதுக்கீடு	11	554,030	585,730
விற்பனை நட்டம்		13,436	560,943
சீராக்கங்களாவன			
கடன்பட்டோரில் மாற்றம்		(3,940,183)	(905,105)
காகிதாயிகள் இருப்பில் மாற்றம்		(208,255)	59,095
T - சேர்ட்டுக்கள் இருப்பில் மாற்றம்		94,200	-
முற்பண கொடுப்பனவில் மாற்றம்	3	947,797	(875,793)
பண்டிகை முற்பணத்தில் மாற்றம்		-	(1,250)
நிலுவை செலவினத்தில் மாற்றம்		4,944,558	(163,536)
ஏனைய பெறுகைகளில் மாற்றம்		(167,930)	10,000
கடன் கொடுத்தோரில் மாற்றம்		844,000	1,149,334
		(1,030,148)	(13,656,080)
பணிக்கொடை கொடுப்பனவு		(267,265)	-
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்		**(1,297,413)**	(13,656,080)
முதலிட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்			
நிலையான சொத்துக்கள் கொள்வனவு	7	(441,068)	(114,355)
மகாவலி கருத்திட்ட செலவினம்		(564,212)	(14,159,766)
சொத்து விற்பனை வரும்படி		1,000	-
புத்தாக்குனர் நிதியத்திலிருந்து கடன் மீள் கொடுப்பனவு		12,000	616,024
புத்தாகுனர் நிதியத்திலிருந்து செலவினம்		-	(98,582)
அனர்த்தக்கடன் வழங்குகை		(543,474)	(1,215,300)
அனர்த்தக்கடன் மீள் கொடுப்பனவு		1,108,042	773,303
பிழை திருத்தம்		(54,973)	-
கொவிட் 19 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மானியம்		-	(160,120)
கடன் இரத்து		-	805,000
நவநிபையும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடன்		-	(1,025,750)
காசோலை இரத்து		216,000	-
முன்னைய வருடம் தொடர்பில் பெற்ற பணம்		49,520	-
கடன் மீள் கொடுப்பனவு IAFM-SL		2,136,800	-
IAFM-SLகீழ் கடன்		(5,950,000)	(6,000,000)
பிறப்பிக்கப்பட்ட காசு முதலீட்டு செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டது		**(4,030,365)**	(20,579,548)
நிதி செயற்பாடுகளில் காசோட்டம்			
மூலதன மானியம்		10,070,000	7,900,000
மகாவலி கருத்திட்டம்		588,891	22,079,592
நிதி செயற்பாடுகளில் மூலம் பிறப்பிக்கப்பட்ட காசு		**10,658,891**	29,979,592
வருட காலப்பகுதியில் காசும் காசிற்கு சமமானவற்றிலும் அதிகரிப்பு குறைவு/		5,331,114	(4,256,036)
வருட தொடக்கத்தில் காசும் காசிற்கு சமமானவையும்		62,331,856	66,587,892
வருட இறுதியில் காசும் காசிற்கு சமமானவையும்		**67,662,970**	**62,331,856**
காசும் காசிற்கு சமமானவையும் பகுப்பாய்வு			
கணக்கிலக்கம் .033-1-001-0-1791066		19,799,754	11,925,890
கணக்கிலக்கம் .033-1-001-2-1791065		45,510,115	48,954,908
கணக்கிலக்கம் .204402131791066		2,353,101	1,451,059
		67,662,970	62,331,856

39-41 பக்கங்கள் வகரயில ள்ள முக்கியமான கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
வரவு செலவு திட்ட மற்றும் உண்மையான நிதியங்களை ஒப்பிடல்

இல. ரூபா.

	அனுமதிக்கப்பட்ட பாதீடு		திறை சேரியினால் விடுவிக்கப்பட்ட நிதியம்	
	2022	**2021**	**2022**	**2021**
நடப்பு	**50,500,000**	46,000,000	**49,400,000**	40,370,000
மூலதனம்	**30,000,000**	17,500,000	**10,070,000**	7,900,000
மொத்தம்	**80,500,000**	**63,500,000**	**59,470,000**	**48,270,000**

வருடம்	அரச பங்களிப்பு மூலதனம் (இலங்கை ரூபாய்)
1991	163,050
1992	1,700,000
1993	-
1994	250,000
1995	196,000
1996	113,500
1997	757,000
1998	1,700,000
1999	290,000
2000	4,500,000
2001	2,870,000
2002	700,000
2003	2,500,000
2004	621,000
2005	5,997,000
2006	33,991,000
2007	37,100,000
2008	24,106,000
2009	15,765,000
2010	4,500,000
2011	6,151,010
2012	21,562,000
2013	17,061,000
2014	40,000,000
2015	30,269,992
2016	57,248,655
2017	73,133,822
2018	85,750,000
2019	58,000,000
2020	24,538,000
2021	7,900,000
2022	**10,070,000**

பிரதானமான கணக்கியற் கொள்கைகள்

1.ஆணைக்குழு பற்றிய தகவல்கள்

1.1 அறிக்கை செய்யும் நிறுவகம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தினூடாக இலங்கை சார் புத்தாக்குனர்களையும் மற்றும் அதனோடிணைந்த நடவடிக்கைளையும் மேம்படுத்தி மற்றும் உற்பத்தி செய்யும் பொருட்டு ஒரு நியதிச் சட்ட சபையாக தாபிக்கப்பட்டது. ஆணைக்குழுவானது கல்வி அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் செயற்படுகின்றது. 2022 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவானது கொழும்பு 05 இல் அமைந்துள்ள " மெஹெவர பியச" கட்டிடத்தில் 05 அது தளத்தில் அமைந்துள்ளது .

2.தயாரிப்பின் அடிப்படை

பிரதானமாக கணக்கியற் கொள்கைகள் உள்ளடங்கலாக இலங்கை அரச துறை சார் கணக்கியற் கட்டளைச் சட்டங்கள்(SLPAS) மற்றும் அதனுடன் தொடர்புடைய நியதிச் சட்ட தேவைப்பாடுகள் ஆகியவை உள்ளடங்கலாக நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட அடிப்படையினை இப்பிரிவு எடுத்துக்கூறுகின்றது.

2.1 ஒப்புமை கூற்று

ஆணைக்குழுவினது 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற வருடத்திற்குரியதும் அத்திகதியில் உள்ளவாறானதுமான நிதியியல் கூற்றுக்களாவன, கணக்காய்வாளர் நாயகம் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு என்பனவற்றின் பங்களிப்புடன் இலங்கை பட்டய கணக்கறிஞர் நிறுவகத்தினை சார்ந்த பொதுத்துறை கணக்கியற் கட்டளைச்சட்ட குழுவினால் முன்வைக்கப்பட்ட இலங்கை பொதுத்துறை கட்டளைச்சட்டங்களிற்கு அமைவுற தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிதிக்கூற்றுக்களாவன கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்களை உள்ளடக்கியுள்ளது
- நிதிச் செயலாற்றுகை கூற்று
- ஆணைக்கழு பற்றிய விபரங்களைத் தரும் நிதியியல் நிலை பற்றிய கூற்று
- மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் ஆணைக்குழுவின் ஒப்புரவில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக்கூறும் வகையில் தயாரிக்கப்பட்ட ஒப்புரவின் மாற்றம் பற்றிய கூற்று
- ஆணைக்குழுவின் காசு பிறப்பிக்கக்கூடிய திறமை மற்றும் ஆணைக்குழுவின் தேவைப்பாடுகளுக்கு அமைவுற அவை பயன்படுத்தப்பட்டமை போன்ற விபரங்களினை தருகின்ற காசோட்டக் கூற்று
- கணக்கியற் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க விபரங்களை உள்ளடக்கிய வகையில் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிக்கான குறிப்புக்கள்

2.2 நிதியியல் கூற்றுக்களுக்கான பொறுப்பு

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளைச் சட்டங்களிலுள்ள ஏற்பாடுகளிற்கு அமைவுற, ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னளிப்பு என்பனவற்றுக்கு பணிப்பாளர் சபையே பொறுப்பாகும்

2.3 அளவீட்டின் அடிப்படை

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களான அட்டுறு அடிப்படையில் வரலாற்று கிரய முறையில் மாற்றங்கள் எதுவும் செய்யப்படாது நிலையான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதோடு பணவீக்கத்துடன் தொடர்புடைய காரணிகள் தொடர்பில் எதுவித சீராக்கங்களும் செய்யப்படவில்லை.

2.4 நாணய செயற்பாடும் அதனது முன்னளிப்பும்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களாவன இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் இதுவே நிறுவகத்தின் செயற்பாடுகள் நிமித்தம் பயன்படுத்தப்படும் நாணயமாகும். நிதியியல் ரீதியிலான தகவல்களாவன இலங்கை ரூபாயில் முன்னளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2.5 திரவியத் தன்மையின் பாவனை, ஈடு செய்தல் மற்றும் முழு நாணயமாக்குதல்

2.5.1 திரவியங்களும் மற்றும் கூட்டுத் தொகையும்

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளைச்சட்டங்கள் (SLPSAS) 1 இல் நிதியியல் கூற்றுக்களினை அனுமதித்தல் என்பதில் அனுமதிக்கப்பட்டதற்கு அமைவுற, ஒரே தன்மையிலான உருப்படிகளைக் கொண்ட ஒவ்வொரு திரவிய வகுதியும் நிதிக் கூற்றுக்களில் தனியாக முன்னளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஒரே தன்மையினது அல்லாத உறுப்படிகள் மற்றும் செயற்பாடுகள் என்பன அவை திரவிய வகுதிகளாக இல்லாத போதிலும் அவை தனித்தனியாக முன்னளிப்பு செய்யப்படுகின்றது

2.5.2 ஈடு செய்தல்

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளைச்சட்டங்களில் அனுமதிக்கப்பட்டாலேயன்றி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் வருமானம் மற்றும் செலவினம் என்பன நிதியியல் கூற்றுக்களில் ஈடு செய்யப்படவில்லை

2.5.3.முழு நாணயமாக்குதல்

"நிதியியல் கூற்றுக்களில் தரப்பட்டுள்ள தொகைகளாவன அண்மித்த ரூபாயிற்கு முழு நாணயமாக்குதல் செய்யப்பட்டுள்ளது"

2.6 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களாவன தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

2.7 அறிக்கை செய்யும் காலப்பகுதிக்குப்பின் நிகழ்ந்த நிகழ்வுகள்

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளை சட்டங்கள் (SLPSAS) 6 இற்கு அமைவுற அறிக்கை செய்யப்பட்ட திகதிக்கும் மற்றும் நிதியியல் கூற்றுக்கள் வெளியீடு செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட திகதிக்கும் இடையில் இடம் பெற்ற அனுகூல மற்றும் பிரதிகூல நிகழ்வுகள், அறிக்கைசெய்யப்பட்ட பின் நிகழ்ந்த நிகழ்வுகளாகக் கருதப்படும்.

இதனடிப்படையில் அறிக்கை செய்யப்பட்ட திகதிக்குப்பின் எதுவித நிகழ்வுகளும் இடம் பெறவில்லை

3.வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளை சட்டம் (SLPSAS) 5 இற்கு அமைவுறகொடுக்கல் வாங்கல் இடம் பெற்ற போது நிலவிய நாணய பரிமாற்ற வீதத்தின் அடிப்படையில் வெளிநாட்டு பரிமாற்று வீதத்திற்குட்பட்ட சகல கொடுக்கல் வாங்கல்களும் இலங்கை ரூபாயிற்கு அதாவது இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் செயற்படும் நாணயத்திற்கு மாற்றப்பட்டன .

4.சொத்து மற்றும் கருவிகள்

4.1 இனம் கண்டறியப்படும் அடிப்படை

திருத்தி பாவிக்கக்கூடியதும் அருவ சொத்துக்களாவாக இருக்கின்ற சொத்து மற்றும் கருவிகளாவன. ஒரு வருடத்திற்கும் அதிகமாக பாவிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

4.2 அளவீட்டின் அடிப்டை

ஒரு சொத்தாக இனம் காணப்படும் சொத்து ஆதனம் மற்றும் கருவிகள் என்பன ஆரம்பத்தில் அதன் கொள்விலையில் மதிப்பீடு செய்யப்படும் கொள்விலை என்னும் போது அதற்குள் அச் சொத்தை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்டசெலவினம் மற்றும் அதைத் தொடர்ந்து அச் சொத்திற்கு புதிதாக ஒரு பாகத்தை சேர்க்கவோ அல்லது ஒரு பாகத்தை பிரதியீடு செய்யவோ ஏற்பட்ட செலவினம் என்பன அதற்குள் உள்ளடங்கும் .

கணணி கருவிகளினை பொறுத்தவரையில் அக் கணணியின் செயற்பாட்டுடன் தொடர்புற்ற வகையில் கொள்வனவு செய்யப்படும் மென்பொருள் தொடர்பில் செலவிடப்படும் செலவினமும் அக் கணணியின் கொள்விலையுடன் சேர்க்கப்படும்

சொத்து மற்றும் கருவிகளின் பாகங்களாவன வேறுபட்ட பாவணை காலத்தை கொண்டிருப்பின் அவை குறிப்பிட்ட அந்த சொத்து மற்றும் கருவிகளினது தனிப்பட்ட உறுப்படிகளாக (பிரதான ஆக்கக்கூறுகள்) கருதப்டும் .

இந்த சொத்து மற்றும் கருவிகள் தொடர்பில் இடம் பெற்ற திருத்தற் மற்றும் பேணல் செலவினங்கள் அந்தந்த காலப்பகுதிக்கான இலாப மற்றும் நட்ட கணக்கில் பதியப்படும். பிரதான திருத்தற் செலவினங்களாவன, அந்த சொத்தின் நடப்புபெறுமதியினை அதிகரிக்கும் பொருட்டு அல்லது எதிர்கால பொருளில் அனுகூலங்களினை கருத்திற் கொண்டு அக் குறிப்பிட்ட சொத்தின் கொள்விலைப் பெறுமானத்தின் ஒரு பகுதியாக கருதப்படும் . பிரதான திருத்தற் செலவினங்கள் அச்சொத்தின் எஞ்சியுள்ள பாவணை காலத்தை கருத்திற் கொண்டு பெறுமானத் தேய்விற்கு உட்படுத்தப்படும்.

4.3 மீள் மதிப்பீடு

2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், 31 ஆம் திகதியில் இருந்து வாகன வகையினை சார்ந்த சொத்துக்கள் தொடர்பில் மீள் மதிப்பீட்டு முறையானது பயன்படுத்தப்பட்டது.வாகன வகையினை சார்ந்த சொத்துக்களாவன நியாயமானதொரு விலையில் பதிவு செய்யப்படிருந்தன.மீள் மதிப்பீட்டு மிகையானது உரிமையாண்மையில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

4.4 அங்கீகாரமின்மை

சொத்து மற்றும் உபகரணங்களை அகற்றும்போது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது அவற்றுக்கான அங்கீகாரம் நீக்கப்படுவதனால் ஏற்படும் எந்த இலாபம் அல்லது நஷ்டமானது (சொத்தின் விற்பனை விலைக்கும் மற்றும் பின் கொண்டு செல்லும் தொகைக்கும் இடையே உள்ள வித்தியாசம்) சொத்தின் அங்கீகாரம் நீக்கப்பட்ட ஆண்டின் 'பிற வருமானம் அல்லது பிற செலவுகளில்' அங்கீகரிக்கப்படுகிறது

4.5 பெறுமானத் தேய்வு

சொத்து மற்றும் கருவிகளின் ஒவ்வொரு பகுதியினதும் மதிப்பீட்டு பாவனைக் காலத்தை கருத்திற் கொண்டு நேர்கோட்டு முறையில் கணிப்பீடு செய்து இலாப நட்ட கணக்கில் பதியப்படும்.

சொத்துக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பாவனை2022/01/01 இல் இருந்து மீள் நோக்கப்பட்டுள்ளது .

நடப்பு மற்றும் ஒப்புமை வருடங்களிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பாவனை காலமானது வருமாறு .

சொத்தின் வகை	**வருட வீதம்**	**காலப் பகுதி (வருடங்கள்)**
அலுவலக தளபாடம்	5% -10 %	10-20
அலுவலக கருவிகள்	10%-20%	05- 10
பெயர் பலகைகள்	6 2/3%	15
வாகனங்கள்	20%	05
ஊடக கருவிகள்	10%	10
தொலைக்காட்சி மற்றும் கட்புல நாடா	12.5%	08
அலுவலக பொருத்துக்கள்	10%	10
அடைகாக்கும் இயந்திரங்கள்	20%	05

2014 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து வருடாந்த நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்படுமிடத்து இலங்கைபொதுத்துறை கணக்கியற் கட்ளைச் சட்டம் (SLPSAS) 7 பயன்படுத்தப்படுகின்றது

4.6 முற்றுமுழுதாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் கருவிகள்

முற்றுமுழுதாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதும் நிதியியல் நிலமைக் கூற்றில் உள்ளவாறான திகதியில் இன்னமும் பாவனையில் உள்ளதுமான ஆணைக்குழுவினது சொத்துக்கள் கருவிகள் பற்றிய விபரங்கள் வருமாறு

டிசம்பர் 31இல் உள்ளவாறாக	**2022 இலங்கை ரூபாய்**	**2021**
அலுவலக தளபாடம்	489,885	861,200
அலுவலக கருவிகள்	3,256,497	5,490,577
ஊடக கருவிகள்	1,127,435	1,380,935
தொலைக்காட்சிமற்றும் கட்புல நாடா	107,850	941,600
மொத்தம்	**4,981,667**	**8,674,312**

4,7 பாவனையிலிருந்து ஓய்வு பெற்றசொத்து மற்றும் கருவிகள்

ஆணைக்குழுவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் கருவிகளாவன அறிக்கை செய்யும் திகதியில் பாவனையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளது

டிசம்பர் 31 இல் உள்ளவாறாக	**2022 இலங்கை ரூபாய்**	**2021 இலங்கை ரூபாய்**
அலுவலக தளபாடம்	19,750	--
அலுவலக கருவிகள்	194,000	19,990
பெயர் பலகைகள்	----	110,805
அலுவலக பொருத்துக்கள்	38,000	38,000
மொத்தம்	**251,750**	**168,795**

5.வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டம் – ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

சம்மந்தப்பட்ட நியதிச்சட்ட மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவுற, ஊழியர்கள் ஊழிய சேமலாப நிதிச்சட்டம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு சட்டத்திற்கு உரித்துடையவர்கள் ஆவார்கள். ஊழியர் சேமலாபத்தை பொருத்தவரையில், ஆணைக்குழுவும் மற்றும் ஊழியர்களும் முறையே ஊழியர் சம்பளத்தில் 15% மற்றும் 10% இனை ஊழியர்களின் சேமலாபநிதியத்திற்கு பங்களிப்பு செய்யும் அதே வேளையில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் 3% இனை ஆணைக்குழு பங்களிப்பு செய்யும்

6.நிதியம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு அரசின் பங்களிப்பானது அரசின் வருடாந்த மதிப்பிட்டில் இரு வகுதிகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அவையாவன

1.நடப்பு செலவினத்திற்கான நிதியம்
2.மூலதன செலவினத்திற்கான நிதியம்
நடப்பு மானியமானது வருமான மற்றும் செலவின கணக்கில் கணக்கீடு செய்யப்படுவதுடன் மூலதன மானியமானது, இலங்கை பொதுத்துறை கணக்கியற் சட்டம் 20 இற்கு அமைவுற கணக்கீடுசெய்யப்படும்

ஆணைக்குழுவின் நடப்பு செலவினமானது வருமான மற்றும் செலவின கணக்கில்

1.நிர்வாக மற்றும் தாபிப்பு செலவினம்
2.தனியாள் வேதனாதிகள்

ஆகியவற்றில் காட்டப்படும்.

1979 ஆம் அண்டின் 53 ஆம் இலக்க ஊக்குவிப்பு சட்டத்திற்கு அமைவுற ஆணைக்குழுவின் நோக்குகளினை பூரணப்படுத்துவம் செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆணைக்குழுவினால் செலவிடப்பட்ட செலவினங்கள் மூலதனசெலவினங்களாக பிரதிநிதித்துவம் செய்யப்படும்.

அரச மானியங்களுடன் தொடர்புடைய நடப்பு செலவினங்கள் இலாப நட்ட கணக்கிலும் மற்றும் அரச மானியங்களுடன் தொடர்புடைய மூலதன செலவினங்கள் மூலதனமாகவும் கணக்கீடு செய்யப்பட்டும் அதே வேளையில் சம்பந்தப்பட்ட மூலதன செலவினமானது காலத்துடன் இலாபம் அல்லது நட்டத்தில் கடன் தீர்வு செய்யப்படும் .

7.காசோட்டக் கூற்று
இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் காசோட்டக் கூற்று அரச பொதுத்துறை கணக்கியற் சட்டம் 2 இற்கு அமைவுற நேரடியற்ற முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது

8.நிதி சேகரிப்பு / அனுசரனையாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடைகள்

ஆணைக்குழுவானது ஒதுக்கீட்டு கணக்குகளின் ஊடாக அனுசரணையாளர்கள் மற்றும் தரப்பினரிடமிருந்து நிதியத்தினை ஆணைக்குழு சேகரிக்கின்றது.

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

		2022 இல. ரூபா.	2021 இல. ரூபா.
1	**காசும் வங்கி மீதியும்**		
	காசுப்புத்தகம்- 033100101791066	19,799,754	11,925,890
	காசுப்புத்தகம்- 033100121791065		
	அடை காப்பகம்	13,762,138	13,762,138
	IFMSL	26,687,415	30,495,958
	புத்தாக்குனர் நிதியம்	5,060,562	4,696,812
	காசுப்புத்தகம்- 204402131791066 வெளிநாட்டு நிதியம்)	2,353,101	1,451,059
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**67,662,970**	62,331,856
2	**கடன் பட்டோர்**		
	ரிஷான் துலாஞ்சன	316,631	174,223
	C. தசநாயக	691,800	668,100
	T. சக்தி குமார்	-	274,000
	S. ரணசிங்க	245,698	298,895
	சாகரிகா உபமாலி	128,256	73,012
	உதயசிறி	366,666	366,666
	திஷந்த பிரேமநாத்	224,847	97,230
	நிலந்த குணசிங்க	267,930	123,060
	சமன் ஹெட்டி ஆராச்சி	497,352	204,012
	துலித சிஹனிது	580,200	-
	றோஹான் பேசில் நிஷ்ஷங்க	100,000	-
	ஜெயவர்த்தன	2,800,000	-
	ஏனையவை -- செயற்பாட்டில் அற்றவை	9,117,683	9,117,683
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**15,337,063**	11,396,880
3	**முற் கொடுப்பனவுகள்**		
	ஒப்பந்த சேவைகள் முற் கொடுப்பனவுகள்	520,856	525,453
	மடி மேல் கணணி முற் கொடுப்பனவுகள்	-	943,200
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**520,856**	1,468,653
4	**ஐயக்கடன் ஒதுக்கீடு 100%**		
	ஜனவரி 31 இல் உள்ளவாறான மிகுதி	9,602,964	9,802,964
	வருடத்திற்கான ஒதுக்கீடு	-	-
	அறவிட முடியா கடன் பட்டோர்	-	(200,000)
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**9,602,964**	**9,602,964**
5	**முற் கொடுப்பனவுகள்**		
	ஒப்பந்த சேவைகள் முற் கொடுப்பனவுகள்	2,400,000	2,400,000
	மடி மேல் கணணி முற் கொடுப்பனவுகள்	2,000	2,000
	சஹாசக் நிமாவும் முற் கொடுப்பனவுகள்	5,000	5,000
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**2,407,000**	**2,407,000**
6	**இருப்பு மதிப்பீடு (இலங்கை அரச பொதுத்துறை கணக்கியற் கட்டளை சட்டம் 9 - SLPSAS)**		
	காகிதாயிகள் இறுதி இருப்பானது SLPSAS 9 இற்கு அமைவுற முதல் வந்தது முதல் போதல் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது		
	காகிதாயிகள்		
	ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி	386,860	445,954
	வருடகாலத்தில் கொள்வனவு	549,962	397,200
	வருடகாலத்தில் செலவினம்	(341,707)	(456,295)
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**595,115**	386,860
	T - சேர்ட்டுகள்		
	ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி	414,480	414,480
	வருடகாலத்தில் கொள்வனவு	-	
	வருடகாலத்தில்செலவினம்	(94,200)	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**320,280**	414,480

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

7. பெறுமானத்தேய்வு (நிலையான சொத்துக்கள்)

	அலுவலக உபகரணங்கள்	தளபாட உபகரணங்கள்	பெயர் பலகைகள்	வாகனங்கள்	கண்காட்சி விற்பனையகம்	ஊடக உபகரணங்கள்	தொலைக்காட்சி மற்றும் கானொளி நாடாக்கள்	அலுவலக பொருத்துக்கள்	இயந்திரமும் கருவிகளும்) (அடைகாப்பக நிலையங்கள்	மொத்தம்
	இல. ரூபா.	இல. ரூபா.	இல. ரூபா.	இல. ரூபா.	இல. ரூபா.	இல. ரூபா.	இல. ரூபா.	இல. ரூபா.	இல. ரூபா.	இல. ரூபா.
கிரய விலை /சாதார பெறுமதி										
2021 ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி	11,057,382	2,412,224	211,305	16,470,191	37,690	2,264,999	950,300	1,139,502	37,477,948	**72,021,543**
வருடத்தில் சேர்க்கப்பட்டவை	757,400	-	-	-	-	-	-	114,355	-	**871,755**
வருடத்தில் விற்பனை செய்யப்பட்டவை	(33,272)	(4,631)	-	-	-	-	-	-	-	**(37,902)**
மாற்றீடுகள்	(187,992)	161,997	-	-	-	25,995	-	-	-	**-**
அங் கீகரிக்கப்படாதவை	(800,261)	-	-	-	(37,690)	-	(3,900)	(1,027,682)	-	**(1,869,533)**
மீள் மதிப்பீடு	-	-	-	5,029,809	-	-	-	-	-	**5,029,809**
2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**10,793,257**	**2,569,590**	**211,305**	**21,500,000**		**2,290,994**	**946,400**	**226,175**	**37,477,948**	**76,015,672**
வருடத்தில் சேர்க்கப்பட்டவை	1,336,320	42,098	-	-	-	5,850	-	-	-	**1,384,267**
வருடத்தில் விற்பனை செய்யப்பட்டவை	(27,000)	(944)	(110,805)	-	-	-	-	(18,880)	-	**(157,629)**
2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**12,102,577**	**2,610,744**	**100,500**	**21,500,000**	**-**	**2,296,844**	**946,400**	**207,295**	**37,477,948**	**77,242,310**
திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு										
2021 ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி	9,370,349	1,729,868	171,213	16,470,191	37,690	1,577,965	805,930	557,034	5,822,614	**36,542,851**
வருடத்திற்கான விதிப்பனவுகள்	1,836,823	256,259	10,050	-	-	182,012	143,497	15,410	7,495,590	**9,939,639**
விற்பனைகள்	(32,142)	(4,631)	-	(16,470,191)	-	-	-	-	-	**(16,506,963)**
மாற்றீடுகள்	(186,145)	160,150	-	-	-	25,995	-	-	-	**0**
அங் கீகரிக்கப்படாதவை	(794,692)	-	-	-	(37,690)	-	(3,900)	(473,438)	-	**(1,309,719)**
2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	10,194,193	2,141,646	181,263	0	-	1,785,972	945,527	99,006	13,318,204	**28,665,809**
முன்னைய வருட சீராக்கல்	-	-	-	-	-	-	-	10,467	-	**10,467**
பாவனை கால பாதிப்பின் சீராக்கம்	(2,792,406)	(731,800)	(23,449)	-	-	(264,595)	(298,708)	(23,804)	-	**(4,134,762)**
2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி (மீள் குறிப்பீடு)	**7,401,787**	**1,409,846**	**157,813**	**0**	**-**	**1,521,377**	**646,818**	**85,669**	**13,318,204**	**24,541,514**
வருடத்திற்கான விதிப்பனவுகள்	873,490	149,314	6,700	4,300,000	-	116,417	104,819	16,930	7,495,590	**13,063,260**
விற்பனைகள்	(22,133)	(588)	(110,805)	-	-	-	-	(9,668)	-	**(143,194)**
2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**8,253,145**	**1,558,572**	**53,708**	**4,300,000**	**-**	**1,637,793**	**751,637**	**92,931**	**20,813,794**	**37,461,580**
தேறிய புத்தக பெறுமதி									-	
2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறாக (மீள் குறிப்பீடு)	3,391,470	427,944	30,043	21,500,000	-	505,022	873	127,168	24,159,745	**47,349,863**
2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறாக	**3,849,432**	**1,052,171**	**46,792**	**17,200,000**	**-**	**659,051**	**194,763**	**114,364**	**16,664,155**	**39,780,730**

* ஜனவரி 01, 2022 முதல் அமுலுக்கு வரும் வகையில் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மாற்றப்பட்டுள்ளது.

* டிசம்பர் 31, 2021 முதல் வாகன வகை சொத்துக்களுக்கு மறுமதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படுகிறது. அந்த வகை சொத்துக்கள் அவற்றின் நியாயமான மதிப்பில் மதிப்பீட்டு செய்யப்படும் . மறுமதிப்பீட்டு மிகையானது ஒப்புரவில் அங்கீகரிக்கப்படுகிறது. ஏனைய சொத்துக்களாவன உயர் திரவத்தன்மையானவை இல்லை என்பதனால் அவை வரலாற்றுச் கிறைய அடிப்படையில் மதிப்பீட்டு செய்யப்படும்

* வாகனம் எண்.253-2750, ஆனது திறன் விருத்தி , தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சினால் 17 செப்டம்பர், 2020 தொடக்கம் ஆணைக்குழுவின் பயன்பாட்டுக்காக மாற்றப்பட்டது.

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

			2022 இல. ரூபா.	2021 இல. ரூபா.
8	**கொடுக்கப்படவேண்டிய ஏனையவைகள்**			
	கடன் கொடுத்தோர்		2,160,664	1,316,664
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி		**2,160,664**	1,316,664
9	நிலுவைச் செலவினங்கள்			
	செலுத்தப்படவேண்டிய துப்புரவாக்கற் செலவினம்		12,558	46,765
	செலுத்தப்படவேண்டிய நீர்க்கட்டணம்		10,562	10,361
	செலுத்தப்படவேண்டிய மின்சாரக் கட்டணம்		210,295	129,193
	செலுத்தப்படவேண்டிய தொடர்பாடல் செலவினம்		41,592	50,566
	செலுத்தப்படவேண்டிய எரிபொருள், மசகு எண்ணெய் செலவினம்		24,400	200,261
	செலுத்தப்படவேண்டிய கணக்காய்வு கட்டணம்		1,089,800	770,500
	செலுத்தப்படவேண்டிய மேலதிக நேர வேலை கட்டணம்		9,841	68,816
	செலுத்தப்படவேண்டிய ஏனைய ஒப்பந்த சேவைகள் கட்டணம்		171,077	-
	செலுத்தப்படவேண்டிய சஹசக் நிமவும்		1,460,355	4,284
	கொடுக்கப்பட வேண்டிய பணிக்கொடை		131,285	-
	புத்தாக்குனர் கழகம் கொடுக்கப்படவேண்டியவை		40,000	-
	செலுத்தப்படவேண்டிய ஏனைய படிகள்		-	51,500
	செலுத்தப்படவேண்டிய பிரயாண செலவினம்		350	2,400
	வாடகை கொடுக்கப்பட வேண்டியவை		2,334,000	-
	காகிதாயிகள் கொடுப்பனவு		-	206,391
	கொடுக்க வேண்டிய முத்திரை கட்டணம்		1,725	1,950
	கொடுக்க வேண்டிய ஏனைய நிர்வாக செலவினம்		1,559,191	658,986
	கொடுக்க வேண்டிய ஏனையவை		49,500	-
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி		**7,146,531**	2,201,973
10	**மகாவலி கருத்திட்ட ஒதுக்கீடு**			
	ஜனவரி 31 இல் உள்ளவாறான மிகுதி		6,534,026	-
	மகாவலி அதிகாரசபையிடமிருந்து கிடைக்கப்பட்ட நிதியம்		588,891	22,079,592
	கருத்திட்ட செயற்பாடுகளுக்கான செலவினம்			
	நேனோ நோக்கு அனுராதபுர செலவினம்		-	(14,159,766)
	உரிமை ஊதிய வருவாய்		-	(185,625)
	யானை வேலி கருத்திட்டத்தில் இருந்து நிர்வாக செலவினம்		(564,212)	(366,250)
	கடன் கொடுத்தோர் மகாவலி அதிகாரசபைக்கு கொடுக்க வேண்டியது		-	(761,525)
	நேனோ நோக்கு அனுராதபுர கொடுக்க வேண்டியது		-	(72,400)
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி		**6,558,705**	6,534,026
11	**பணிக்கொடை**			
	1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டம்பணிக்கொடை-கொடுப்பனவு			
	ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி		4,268,344	3,682,614
	வருடத்திற்கான ஒதுக்கீடு		554,030	585,730
	வருடத்திற்கான பணிக்கொடை கொடுப்பனவு		(398,550)	-
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி		**4,423,824**	**4,268,344**
12	**புத்தாக்குனர் விரைவுபடுத்துகை நிதிய பொறிமுறை) இலங்கை -IAFM-SL)**			
	ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி		36,472,155	46,472,155
	கிடைக்கப்பெற்ற நிதியம்		-	-
	புத்தாகுனர் நிதியத்திற்கு மாற்றப்பட்டது		-	(10,000,000)
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி		**36,472,155**	36,472,155
13	**தேசிய அடைக்காப்பக நிதியத்திற்கான செலவினம்**			
	ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி		37,921,883	45,417,472
	கிடைக்கப்பெற்ற நிதியம்		-	-
	அடைக்காப்பகங்களினை தாபிப்பதற்கான செலவினம்			
	ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மீதான கடன் தீர்வு	5	(3,648,242)	(3,648,242)
	ருகுணு பல்கலைக்கழகத்தின் மீதான கடன் தீர்வு செலவினங்கள்	5	(3,847,348)	(3,847,348)
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி		**30,426,293**	37,921,883
14	மூலதன மானியம்			
	ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி		9,905,989	14,334,314
	கிடைக்கப்பெற்ற நிதியம்		10,070,000	7,900,000
	கருத்திட்ட செயற்பாடுகள் மீதான செலவினம்	17	(9,018,748)	(10,107,926)
	பதவியணி செயற்றிறன் நிர்மானம்		(85,500)	(533,750)
	மூலதன மானிய கடன் தீர்வு - நிலையான சொத்துக்கள்	5	(5,567,670)	(1,686,650)
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி		**5,304,071**	9,905,989
15	**இலங்கை புத்தாக்குனர் நிதியம்**			
	ஜனவரி 31 இல் உள்ளவாறான மிகுதி		12,837,184	13,240,886
	"கொவிட் 19 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பகிரப்பட்ட மானியம்"		-	(305,120)
	கை ,தொ சோதனை அறிக்கைகள்-- கொடுப்பனவு. நிறு.		-	(93,582)
	வரை ,நேனோ தொழில் தனியார் நிறுவகத்திற்கு கொடுப்பனவு - சோதனை அறிக்கை		-	(5,000)
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி		**12,837,184**	12,837,184
16	அரச பங்களிப்பு			
	அரச பங்களிப்பின் சுருக்க விபரம் வருமாறு			
	இலங்கை கணக்கியற் சட்டம் 24 இற்கு அமைவுற			
	நடப்பு மானியம்		49,400,000	40,370,000
	மூலதன மானியம்		10,070,000	7,900,000
	வருடத்திற்கானது		**59,470,000**	48,270,000

		2022 இல. ரூபா.	2021 இல. ரூபா.
17	**ஏனைய வருமானம்**		
	அனர்த்த கடன் வட்டி	160,948	143,523
	வெளிநாட்டு நாணய வட்டி	42,359	24,984
	நானாவித வருமானம்	230,534	13,249
	வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல் இலாபம்	1,026,742	96,827
	SN பதிவுக்கட்டணம்	173,042	501,918
	உரிமை ஊதியம்	4,657	230,218
	யானை வேலி கருத்திட்ட நிர்வாக வருமானம்	-	233,123
		1,638,282	**1,243,844**
18	**தனி ஆள் வேதனாதிகள்**		
	சம்பளங்களும் கூலிகளும்	11,375,474	11,671,645
	வாழ்க்கைப்படி செலவினம்	2,188,561	2,301,000
	தொழில் சார்பியல் படிகள்	169,288	144,000
	ஏனைய படிகள்-	1,402,924	-
	ஏனைய படிகள்	393,000	591,000
	எரிபொருள் படி	550,135	-
	தொடர்பாடல் படி	123,000	-
	ஊழியர் சேமலாப நிதி நிதிய செலவினம்	2,034,605	2,095,897
	ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்	408,699	419,179
	மேலதிக நேரம் மற்றும் விடுமுறை கொடுப்பனவு	629,780	663,301
	உறுப்பினர்களுக்கான வேதனம்	1,331,893	1,004,400
	பதவியணி செயற்றிறன் நிர்மாணம்	85,500	533,750
		20,692,859	**19,424,172**
19	**நிர்வாகம் மற்றும் தாபிப்பு செலவினம்**		
	பிரயாண செலவினம் உள் ஊர்	143,619	120,464
	காகிதாயிகள்	353,065	472,407
	எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் செலவினம்	608,233	956,731
	திருத்தற் மற்றும் பேணல் செலவினங்கள் கருவிகள் -	9,189	47,100
	திருத்தற் மற்றும் பேணல் செலவினங்கள் வாகனங்கள் -	532,596	2,350,107
	தபாற் கட்டணம்	56,825	47,900
	தொடர்பாடல் கட்டணம்	564,419	736,889
	பயன்பாட்டு செலவினங்கள்	20,144	75,491
	ஒப்பந்த செலவினம்	1,612,152	1,683,038
	மின்சார கட்டணங்கள்	1,250,039	1,213,047
	துப்புரவாக்கற் கட்டணங்கள்	511,558	469,752
	நீர்க் கட்டணங்கள்	80,969	122,717
	வாடகை செலவினங்கள்	14,834,000	13,375,000
	களியாட்ட செலவினங்கள்	244,592	309,020
	கணக்காய்வு கட்டணங்கள்	319,300	50,000
	குத்தகை, வாடகை செயற்படச் செய்தல்	1,591,600	1,790,550
	ஏனைய நிர்வாக செலவினங்கள்	2,138,709	1,190,359
		24,871,009	**25,010,573**
20	**புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினங்கள்**		
	அடிமட்டத்து புத்தாக்குனருக்கு ஊக்கமளிப்பு	4,736,746	636,657
	ஜனாதிபதி விருதுகள்	74,000	110,111
	சஹசக் நிமவும்' தேசிய கண்காட்சி	1,952,558	4,924,909
	விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்தல்	28,175	-
	புத்தாக்குனர் கழகங்களினை தாபித்தல்	1,520,000	2,993,863
	ISர்வதேச மாநாடு "FITI"	359,065	731,616
	இலக்கு செய்யப்பட்ட குழு போட்டி	131,250	413,379
	அடை காப்பக நிலையம்	-	59,545
	புதுக்கண்டுபிடிப்பு மானிய திட்டம்	-	153,845
	புத்தாக்கங்களினை வர்தகமயப்படுத்தல்	166,514	12,000
	IAFM - SL நிகழ்ச்சித்திட்டம்	50,440	72,000
		9,018,748	**10,107,926**
21	**ஏனைய செலவினங்கள்**		
	சொத்து விற்பனை நட்டம்	13,436	560,943
		13,436	**560,943**

எனது இல.: IMT/F/SLIC/1/22/04 2023 மே 18

ஆணையாளர்
இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1..நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின்154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

அ)இலங்கை பொதுத்துறை கணக்கியல் கட்டளை சட்டம் இலக்கம் 07 இன் பந்தி 65 இற்கு அமைவுற. நிலையான சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருந்தாலும், இன்னும் பயன்பாட்டில் உள்ளதும் ரூபாய்.3.636,467/= மதிப்புள்ளதுமான சொத்துகளின் பயனுள்ள ஆயுளை மதிப்பிடுவதில் உள்ள குறைபாடானது, இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை எண். 03க்கு இணங்க நிதி கூற்றுக்களில் சீராக்கப்படவில்லை

.

ஆ) பயன்பாட்டில் இல்லாததும் ரூபாய் . 194,000, மதிப்புள்ளதுமா கணினி உபகரணங்களுக்கான தேய்மானமானது கணக்கிடப்படவில்லை. இது, இலங்கை பொதுத்துறை கணக்கியல் கட்டளை சட்டம் எண். 07ன் பந்தி 69 உடன் முரண்படுகிறது. இதனால் ஆண்டிற்கான தேய்மானம் ரூபாய் 19,400 இனால் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

இ) இலங்கை பொதுத்துறை கணக்கியல் கட்டளை சட்டம் இலக்கம் 20 இன் பந்தி 07 இன் படி, ஒரு மென்பொருளானது தொடர்புடைய வன்பொருளின் கட்டாய அலகாக இல்லாதபோதும்,அந்த கணினி மென்பொருளானது அருவ சொத்தாகக் கருதப்படல் வேண்டும் .ரூபாய் 162,964 ஆன பெறுமதியான மென்பொருளானது அருவச் சொத்தாக பதியப்படவில்லை .

ஈ) 2019 முதல் 2022 வரை கண்டுபிடிப்பாளர் வட்டங்களை நிறுவ பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட ரூபாய் 4,845,000 பெறுமதியான நிதி உதவிகளுக்கு ஒப்புகை ரசீதுகள் வழங்கப்படவில்லை .

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ .க . நி .)இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் . இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் , கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளினை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

1.3 ஆணைக்குழுவின் 2022 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏனைய தகவல்கள்

ஆணைக்குழுவின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் ஏனைய தகவல்களாவன உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாததாக காட்டப்பட்ட இந்த ஏனைய தகவல்களாவன , இக்கணக்காய்வு அறிக்கைக்குறிய திகதிக்கு பின்பே எனக்கு வெளிப்படுத்தப்பட்டது இதற்கு முகாமைத்துவமே பொறுப்பாகும் .

நிதியியல் கூற்றுக்கள் பற்றிய எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் பற்றி வெளிப்படுத்தப்படவில்லை என்பதுடன் இத் தகவல்கள் தொடர்பில் எதுவித உத்தரவாதமோ அல்லது அபிப்பிராயமோ என்னால் தர முடியாது .
நிதியியல் கூற்றுக்களினை பொறுத்த வரையில் எனது பொறுப்பானது , ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படும் போது அவற்றினை வாசித்தலாகும் .அவ்வாறு வாசிக்கும் போது எனது அறிவுக்கு எட்டிய வரையில் கணக்காய்வின் போது அல்லது வேறு ஏதேனும் வகையில் நிதிக்கூற்றுக்களில் காணப்படக்கூடிய இணங்காமையினை கவனத்தில் கொள்தலாகும்.
.
ஆணைக்குழுவின் 2022 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கையில் திரவியங்கள் தொடர்பிலான தவறான கூற்றுக்கள் பற்றிய விபரங்களாவன ஒரு முடிவுக்கு வந்து அவை திருத்தப்படுவதற்கு அவ்விடயங்கள் ஆளுமை தரப்பினருடன் கலந்துரையாடப்படல் வேண்டும்மேலு ,ம் இத் தவறான கூற்றுகள் திருத்தப்படவில்லை எனில் ,இலங்கை சனநாயக சோசலிச குடியரசினது அரசியலமைப்பின்154 (6) எனும் இலக்கத்தினை கொண்ட உறுப்புரைக்கு அமைவுற இவ்விடயங்களாவன காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்
.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்;ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும்; மன்றத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்;

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும்நியாயம .ான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்லமோசடி அல்லது தவறுகள் . தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரிவு 12(அ)வினது,தேவைப்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து கணக்காய்விற்க்கு தேவையான சகல தகவல்களும் தெளிவாக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் ஆணைக்குழுவினால் பேணப்பட்டிருந்தன.

2.1.2. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6ஐ ஆம் (ஐஐஐ)(ஈ)(பிரிவின்தேவைப்பபிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 6ஐ)(ஈ) iv ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. .ஆனால் கீழே குறிப்பிடப்பட்ட வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(இ) தேவைப்பாடுகளினஂ பிரகாரம் ஆணைக்குழுவின் ஆளுனர் சபை உறுப்பினர் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவுடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமைக்கு புறம்பாக தொடர்பு உள்ளதாகவும்

2.2.2. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(உ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம் அல்லது நிர்வாக சபையினால் விநியோகிக்கப்பட்ட பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாது இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு செயற்பட்டுள்ளதாகவும்

சட்டம் /கட்டளைகளுடன் தொடர்புற்ற வகையில்	***விவரணம்***
(அ) **நிதி ஒழுங்கு விதி *138 (6)* மற்றும் *(8)***	ரூபாய் 720,000 பெறுமதியான 72 காசோலைகள் எழுதப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படாது வைக்கப்படிருந்தது .இது நிதி ஒழுங்கு விதிக்கு புறம்பானது .
(***ஆ***) ***நிதி ஒழுங்கு விதி* 780 (1)**	மின்சார வேலி ஒப்படைப்பு, ***YEILD*** மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றில் ஈடுபட்ட இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு குளிரூட்டி அறைகளில் தங்கும் வசதி, உணவு மற்றும் எரிபொருள் செலவுகள் நிமித்தம் மொத்தமாக ரூபாய் ***1,407,399*** செலவிடப்பட்டிருந்தது.
***(இ) தாபன விதிக்கோவையின் அத்தியாயம்* XIV *பிரிவு* 4**	மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில், ஆணைகுழுவானது நாட்டின் ***9*** மாகாணங்களில் நடத்தப்பட்ட ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளில் கலந்துக்கொண்ட ***14*** அதிகாரிகளுக்கான உணவு மற்றும் பானங்களுக்காக வழங்கப்படவேண்டிய ரூபாய் ***718,028*** கூட்டுக் கொடுப்பனவுக்குப் பதிலாக தங்குமிடத்தை வழங்குவதற்காக ரூபாய் ***461,520*** இனை வழங்கியுள்ளது.
(ஈ) 2009 ***நவம்பர்*** 13 ***ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை இலக்கம்*** 438	***05*** வருடங்களுக்கும் மேலாக பாவனையில் இல்லாத ரூபாய் ***568,000*** பெறுமதியான சொத்துக்களினை அகற்றுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவில் குறிப்பிட்டப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் , இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளது

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கிளர் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் வளங்கள் காலவரையறைக்குள் ஏற்புடைய வகையில் சட்டங்களுக்கு இணைங்கியொழுகி சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பெறப்பட்டு பயன்படுத்தியிருக்கவில்லை எனவும் ;

2.2 ஏனைய விடயங்கள்

(அ)2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் கண்டுபிடிப்பாளர் நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட மொத்தத் தொகையான 9,117,682 ரூபாவை மீளப் பெற வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்தத் தொகையை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ)'சஹசக் நிமவும்' கண்காட்சிக்கான தேவையை பகுப்பாய்வு செய்யாமல், 2018 ஆம் ஆண்டில் ரூபாய் 998,450 செலவில் அச்சிடப்பட்ட 1270 டி-சர்ட்களில் 408 டி-சர்ட்டுகள் மதிப்பாய்வின் ஆண்டின் இறுதியில் கூட பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன் இவற்றின் பெறுமதி ரூபாய் 320,280 ஆகும்.

(இ) செயல் திட்டத்தில் ஒவ்வொரு திட்டங்களின் நடவடிக்கைகளின் கீழ் ரூ.6,950,000 என மதிப்பிடப்பட்ட 05 துணை நடவடிக்கைகள் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் செயல்படுத்தப்படவில்லை

(ஈ) மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் YEILD நிகழ்ச்சித்திட்டம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு மொத்தமாக ரூபாய் 3,254,791 செலவிடப்பட்டுள்ளது. திட்டம் மற்றும் மாகாண மட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு செலவிடப்பட்டுள்ளது.இந்த மொத்த செலவினத்தில் 81%, திட்டத்தில் பங்கேற்பவர்களுக்கு சிற்றுண்டி வழங்குதல், ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு உணவு மற்றும் தங்குமிடம் வழங்குதல் போன்ற நோக்கங்களுக்காக செலவிடப்பட்டது, அவை திட்டத்தின் நோக்கத்துடன் நேரடியாக தொடர்புற்றதாய் இல்லை .

(உ) 2021.ஆண்டில் இருந்து முற்கொண்டு வரும் கடன் தொகையான ரூபாய் 843,924 இனை மீள செலுத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

(ஊ)புத்தாக்குனர் கழகங்களினை தாபிப்பதற்கு விண்ணப்பங்களினை முன்வைக்காத 176 பாடசாலைகளுக்கு 2019 இலிருந்து 2022 வரையில் ரூபாய் 1,780,000 செலுத்தப்பட்டிருந்தது.

டபிள்யு .பி .சி .விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

2022 ஆம் ஆண்டில் கணக்காய்வு வினாக்களால் எழுப்பப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவமும் பணிப்பாளர் குழுவும் எடுத்த நடவடிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்ட விளக்கங்கள்
1. இலங்கை பொதுத்துறை கணக்கியல் கட்டளை சட்ட இலக்கம் 07 இன் பந்தி 65 இன் படி, நிலையான சொத்துக்களின் முழு தேய்மானம் நிறைவடைந்துள்ளது, எனினும், இன்னும் பயன்பாட்டில் உள்ளதும் ரூபாய் 3,636,467 மதிப்புள்ளதுமான சொத்துக்களின் பயன்பாட்டு காலத்தின் மதிப்பீட்டு வழுவானது , அரச துறை கணக்கியல் சட்ட இலக்கம் 03 இன் பிரகாரம், நிதி அறிக்கைகளில் திருத்தப்பட்டு சரி செய்யப்படவில்லை.	ஆளுநர் சபையினது, 2022, ஜனவரி 01 ஆம் திகதியினை உடையதும், 1035.04.02 என்ற இலக்கத்தினை கொண்டதுமான தீர்மான எண் . இன் படி, சொத்துகளின் பயன்பாட்டு காலமானது திருத்தப்பட்டதுடன் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டது.. இந்த பயனுள்ள வாழ்க்கை திருத்தத்தில், சொத்து வகுப்புகளின் சராசரி பயனுள்ள வாழ்க்கை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. நடைமுறையில், முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் சொத்து வகுப்பினுள் இருக்கலாம். அந்த சொத்துக்கள் கணக்குக் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
2. கணினி மென்பொருளானது தொடர்புடைய வன்பொருளின் இன்றியமையாத அங்கமாக இல்லாதபோது, அது ஒரு அருவ சொத்தாக கருதப்பட வேண்டும். இலங்கை பொதுத்துறை கணக்கியல் கட்டளை சட்ட இல.20 இன் பந்தி 07 இன் படி, ரூபாய் 162,964 மதிப்புடைய மென்பொருளானது அருவ சொத்தாக நிதிநிலை அறிக்கைகளில் குறிப்பிடப்படவில்லை.	2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது, அருவ சொத்துக்களை நிதிநிலை அறிக்கைகளில் தனித்தனியாகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
3. ஒரு சொத்து முழுமையாக தேய்மானம் செய்யப்படாவிட்டாலும் அல்லது சொத்து செயலற்ற நிலையில் இருந்தாலும், தேய்மானம் கணிப்பீடு செய்தலானது நிறுத்தப்படக்கூடாது.எனினும் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் பயன்படுத்தப்படாத ரூபாய் 194,000 பெறுமதியான கணினிகள் மற்றும் சாதனங்களாவன தேய்மானம் செய்யப்படாததினால் மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் தேய்மானக் கணக்கீடானது,ரூபாய் 19,400. குறைத்து காட்டப்பட்டது .	நான் அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கிறேன். 2023 ஆம் ஆண்டில் ஆரம்ப மிகுதி திருத்தப்பட்டு முன்னளிப்பு செய்யப்படும் .
4. 2019 முதல் 2022 வரை கண்டுபிடிப்பாளர் கழகங்களினை நிறுவுவதற்கு பாடசாலைகளுக்கு நிதி உதவி வழங்குதல்.	நிதி உதவி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக ஆணைக்குழுவானது பாடசாலைகளிடமிருந்து ரசீது பெறவில்லை என்ற உங்கள் அவதானிப்பை ஏற்கிறேன். எதிர்காலத்தில் இந்த குறைபாட்டை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
5. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் புத்தாக்குனர் நிதியிலிருந்து வழங்கப்பட்ட மொத்தத் தொகையான 9,117,682 ரூபா அறவிடப்பட வேண்டும், ஆனால் மீளாய்வாண்டு இறுதி வரை மேற்படி கடன் மீதி மீளப் பெறப்படவில்லை.	எதிர்காலத்தில் இது தொடர்பில் முறையாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்
6. முன்னைய வருடத்தில் இருந்து முற்கொண்டு வரப்படும் கடன் கொடுத்தோர் தொகையான ரூபாய் 843,924 அறுதியீடு செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கைகள் எடுக்கவில்லை	மகாவலி அதிகார சபையுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் பிரகாரம் ரூபாய் 761,524 இனை தோடா பண்ணையின் பணிகளுக்கு பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆளும் சபையின் தீர்மானங்களின்படி ரூபாய் 72,400 ஐ மகாவலி அதிகாரசபைக்கு செலுத்தியதன் பின்னர் நானோ விஷன் நிறுவனத்திற்கு கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இந்த கொடுப்பனவு தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையை கோரி மகாவலி அதிகார சபைக்கு கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் முறையான நடவடிக்கை எடுக்கப்படும். ரூ 539398 என்ற காசோலை இலக்கத்தினையும் ரூபாய் . 10,000 மதிப்புள்ளதுமான தொகையானது மிக விரைவில் அறுதியீடு செய்யப்படும்.

7. வவுச்சரைச் சான்றளிக்கும் முன், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கொடுக்கப்பட்ட சான்றிதழ்கள் போன்றவை இணைக்கப்பட்டுள்ளதா அல்லது அந்தச் சான்றிதழ்கள் போன்றவற்றைக் கொண்ட கோப்புகளின் கோப்புக் குறிப்பு வவுச்சரில் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும், அந்த வவுச்சர் சரியானது மற்றும் ஒவ்வொரு விவரத்திலும் முழுமையானது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். கமிஷன் முழுமையான விவரங்களை உறுதிப்படுத்த வேண்டும். ஆணைக்குழுவானது,ரூபாய் 720,000 மதிப்புள்ள 72 காசோலைகளினை போதிய விபரங்கள் இன்றி எழுதியதுடன் அவை உரிய பெறுனர்களுக்கு ஒப்படைக்காமல் வைக்கப்பட்டுள்ளன.	பாடசாலைகளில் புதிய கண்டுபிடிப்புக்களுக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும், பாடசாலையில் புதிய கண்டுபிடிப்புக்களினை மேம்படுத்துவதற்கும் தலா 10,000 ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன பாடசாலை புத்தாக்க சங்கங்களினை நிறுவுவதற்கும், ஆணைக்குழுவிற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை வழங்கவும் தவறிய 72 பாடசாலைகள் தொடர்பான காசோலைகள் சம்பந்தப்பட்ட பாடசாலை அபிவிருத்திக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புமாறு அந்தப் பாடசாலைகளுக்கு நினைவூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது, எதிர்காலத்தில் அனுப்பாத பாடசாலைகளின் காசோலைகளை ஆணைகுழு ரத்து செய்யும்.
8. மாதிரி ஆய்வின் போது பற்றுச்சீட்டின் பெறுமானம் சரியாக உள்ளதா என்பதை சரிபார்க்காமல் பணம் செலுத்தப்பட்ட 10 நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபாய் 748,070 ஆகும்.	2022/85 - எதிர்காலத்தில், அலகு , தொகை மற்றும் பற்றுச்சீட்டின் மதிப்பைக் குறிப்பிட்டு முறையான பற்றுச்சீட்டுக்களினை பெற ஏற்பாடு செய்யப்படும் 2022/87,2022/89, 2022/222, 2022/223, 2022/267, 2022/597, 2022/772 - இந்த வவுச்சர்கள் தொடர்பிலான அவதானிப்பினை நான் ஏற்கிறேன். இது குறித்து ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டு, எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். 2022/998 – இதற்குரிய பதிலுக்கு வருகைக்கான சான்றிதல் இணைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத் தர விரும்புகிறேன்.
9. கணக்கியல் அதிகாரிக்கு பணம் செலுத்தும் அதிகாரி பொறுப்பாக இருப்பினும் கணக்கு வைத்திருப்பவரின் அடையாளமானது உறுதி படுத்தப்படல் வேண்டும்2023, மார்ச் கணக்காய்வு திகதிக்கு உள்ளவாறாக நோக்கின்,2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையில் , புத்தாக்குனர் சங்கங்களினை தாபிப்பதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத 176 பாடசாலைகளுக்கு ரூபாய் 1,780,000 வழங்கப்பட்டுள்ளது	விண்ணப்பங்கள் அனுப்பப்படாத 176 பாடசாலைகளுக்கு நிதி உதவி கிடைத்துள்ளதாக உங்களின் அவதானிப்பின் படி. • 70 பாடசாலைகளுக்கு நினைவூட்டல்கள் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் , அதற்கு பதில் கிடைக்கப்படவில்லை எனினும் , எதிர்காலத்தில் புத்தாக்க கழகங்களினை நிறுவுவது தொடர்பான காசோலைகள் தேவைக்கு ஏற்ற வகையில் ரத்து செய்யப்படும். • 10 பாடசாலைகள் தொடர்பில் புத்தாக்க சங்கங்களுக்கான விண்ணப்பங்கள் அல்லது அவற்றின் நகல்கள் தற்போது பெறப்பட்டுள்ளன. • கொரோனா தொற்றுநோய், அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடி, எரிபொருள் பற்றாக்குறை, ஆசிரியர் மற்றும் அதிபர் வேலைநிறுத்தங்கள் மற்றும் விடுபட்ட கல்வி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டி இருந்ததனால் 96 பாடசாலைகளில் இருந்து பெறப்படவேண்டிய விண்ணப்பங்கள் தாமதமாகின. எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படாமல் தடுக்கும் வகையில் ஆணைகுழு செயல்படும்.

10. தற்காலிக இடைக்கால கொடுப்பனவுகள் பதவிநிலை அந்தஸ்து கொண்ட அதிகாரிகளுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்ற விதிகள் உருவாக்கப்பட்டன, ஆனால் ஆணைக்குழுவின் பதவி நிலை அந்தஸ்து அல்லாத அதிகாரிகளுக்கும் இடைக்கால கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.	.ஆணைக்குழுவின் முன்பணத்தைப் பெறுவதற்கு அதிகாரம் கொண்ட 06 பதவி நிலை உத்தியோகத்தர்கள் உள்ளனர். பல்வேறு நிறுவனங்களின் கோரிக்கைகளின்படி முன்னெடுக்கப்படும் பிரதான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிதிட்டங்களினை இலக்காக கொண்ட உப கருத்திட்டங்களுக்கான முற்பணத்தினை இவர்களிடமிருந்து மட்டுமே பெறல் கடினமானதாகும். எனவே, இந்த விடயம் ஆளுநர் சபைக்கு தெரியப்படுத்தப்பட்டது . இதனைத்தொடர்ந்து, நிதி வரம்புகளுக்கு உட்பட்டு நிதி ஒழுங்கு விதி 135 க்கு அமைவுற, மற்ற அதிகாரிகளுக்கு முற்பணத்தை வழங்குவதற்கான ஒப்புதல் பெறப்பட்டது.
11. குறிப்பிட்ட பணியை முடித்தவுடன் தற்காலிகத் இடைக்கால கொடுப்பனவுகள் உடனடியாகத் அறுதியீடு செய்யப்பட வேண்டும் என்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும், 07 சந்தர்ப்பங்களில் ரூபாய் 462,000 பெறுமதியான முற்பணங்களைத் தீர்க்க 06 முதல் 19 நாட்கள் வரை தாமதமாகியுள்ளது . ஆணைக்குழு இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.	எதிர் காலத்தில் உங்கள் பரிந்துரையின் பேரில் இந்த தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்
12. எழுதப்பட்ட காசோலைகளின் துண்டுப் பிரசுரங்கள் அனைத்திலும் வவுச்சர் இலக்கங்களைக் குறிப்பிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், ஆணைக்குழு இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.	இந்த அவதானிப்பினை நான் ஏற்கிறேன் . எதிர் காலத்தில் உங்கள் பரிந்துரையின் பேரில் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்
13. ஒவ்வொரு பொருளும் பரிசீலிக்கப்படும் திகதியில் இருப்பு புத்தகத்தில் காட்டப்பட்டுள்ள பொருட்களின் இருப்புக்கு எதிராக பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டு ஒப்பிடப்பட வேண்டும் என்று இருந்த போதிலும்,இருப்பு மதிப்பீடு கணக்கு பார்க்கும் சபையினால் இருப்பு புத்தகம் பதிவு செய்யப்பட்டு கையொப்பமிடப்படவில்லை,	இந்தப் பிழையானது இந்த விடயம் தொடர்பில் உள்ள அறியாமையினால் ஏற்பட்டதாகும் அடுத்த வருட கணக்கெடுப்பு நடவடிக்கைகளாவன நீங்கள் காட்டும் அவதானிப்புகளின் படி மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.
14. ஒவ்வொரு நிறுவனமும் அரசாங்கப் பணிகள் மற்றும் சேவைகளை சிக்கனத்துடனும் திறமையுடனும் செய்ய வேண்டியதன் அவசியத்தை உரிய முறையில் கவனிக்க வேண்டும் என்று விதிகள் வகுக்கப்பட்டிருந்தாலும், மின்சார வேலி விநியோகம் குளிரூட்டப்பட்ட அறைகளுக்கான தங்கும் கட்டணம், உணவு செலவுகள், எரிபொருள் செலவுகள் மற்றும் YIELD மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு செய்வதற்கான கொடுப்பனவுகள் என மொத்தம் ரூ.1,407,399 ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு செலவிடப்பட்டது. ஆணைக்குழுவின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் புத்தாக்க ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் 31 சதவீதமாகும்.	ஆணைக்குழு தனது உறுப்பினர்களுக்கான தங்குமிட வசதிகளை முடிந்தவரை பொது நிறுவனங்களிலிருந்து வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், நாட்டில் நிலவும் அதீத பணவீக்கப் பொருளாதார சூழ்நிலையால், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் மிக அதிகமாக அதிகரித்துள்ளதால், ஒப்பீட்டளவில் அதிக செலவில் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

15. நாட்டிற்குள் மேற்கொள்ளப்படும் உத்தியோகபூர்வ பிரயாணத்தின் தொடக்கப் புள்ளி அந்த குறிப்பிட்ட அதிகாரியின் பணியிடமாகும், மேலும் பந்தி 2.2 இன் படி அவரது வீட்டிலிருந்து பிரயாணம் தொடங்கினால், அவரது வீடு மற்றும் பணியிடம் ஆகிய இரண்டும் ஒரே நகராட்சி எல்லைக்குள் அமைந்திருந்தால்,அவரது வீட்டிற்கும் பணியிடத்திற்கும் 4 கிலோ மீற்றர் வித்தியாசம் இருந்தால் அல்லதுஅவரது வீடு, அவர் அடையவிருக்கும் இடத்திற்கு அவரது பணியிடத்தினை விட அண்மையில் இருந்தால் அவரது வீட்டை பயணத்தின் தொடக்கப் புள்ளியாகக் கருதலாம். ஆனால், பொலன்னறுவைக்குச் சென்று மின்வேலி கண்காணிப்பு செய்வதற்காக 193 கிலோமீற்றர் தூரத்தில் சென்று அதிகாரிகளை அழைத்துக்கொண்டு பிரயாணமா தொடங்கப்பட்டிருந்தமை அவதானி க்கப்பட்டது.	இந்த அவதானிப்பினை நான் ஏற்கிறேன் . எதிர் காலத்தில் உங்கள் பரிந்துரையின் பேரில் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்
16. உத்தியோகபூர்வமான பிரயாணங்களாவன அரசுக்கு குறைந்த செலவினத்தினை ஏற்படுத்தும் வகையிலும்விரைவாகவும் குறுகிய பாதை வழியாகவும் செல்ல வேண்டும் ஆணைக்குழு விதிகளை வகுத்திருந்தாலும். அதனைக் கவனத்தில் கொள்ளாமல், குறித்த வருடத்தில் நுவரெலியா, கிழக்கு மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் ஆகிய இடங்களில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளினது கண்காணிப்பு நடவடிக்கைகளுக்குச் செல்லும் போதும் மற்றும் மின் வேலியினை கையளிக்க சென்ற போதும் வாகனமானது நிர்ணயிக்கப்பட்ட தூரத்திற்கு அப்பால் 842 கி.மீ சென்றதுடன் அதற்கான கூடுதல் செலவுகள் ரூ. 22,501 ஆக இருந்தது.	இந்த அவதானிப்பினை நான் ஏற்கிறேன் . எதிர் காலத்தில் உங்கள் பரிந்துரையின் பேரில் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்
17. அரச நிறுவனங்களில் அகற்றப்பட வேண்டிய பொருட்கள் மற்றும் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டால், அந்த பொருட்களை உடனடியாக அகற்றல் வேண்டும் என ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், 05 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாமல் உள்ள 568,000 ரூபா பெறுமதியான சொத்துக்களைஅகற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இருப்பு மதிப்பீடு சபையின் பரிந்துரையின் பேரில் சம்பந்தப்பட்ட பொருட்கள் அகற்றப்பட்டன.
18. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி நாளன்று,2018 ஆம் ஆண்டில் ரூ.998,450 செலவில் சஹாசக் உற்பத்தித் திட்டத்திற்காக அச்சிடப்பட்ட 1270 டி-சர்ட்டுகளில் ரூ.320,280 மதிப்புள்ள 408 டி-சர்ட்டுகள் தேவைக்கு அதிகமாக கையிருப்பில் உள்ளன.	அவதானிப்பானது ,சரியானது என்று என்னால் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் எதிர் காலத்தில் இந்த பிழை திருத்தப்படுவதற்க்கு நடவடிக்கை எடுக்கப்படும் . கருத்திட்ட பிரிவின் வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் போது இந்த டி – சேட்டுக்களினை முறையாக பகிர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

19. மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் 3,254,791 ஆனது YEILD மற்றும் மாகாண மட்ட விழிப்புணர்வு நிகழ்வுகளுக்காக செலவிடப்பட்டது,இதில் 45 சதவீதம் அதாவது ரூ.1,475,460 ஆனது பங்கு பெறுனர்களின் உணவு மற்றும் குடிநீர் நிமித்தமும், ரூபாய் 728,408, அதாவது 22% ஆணைக்குழு வினரினது உணவு மற்றும் குடிநீர் நிமித்தமும் மற்றும் ரூபாய் 451,138, அதாவது 14% நிகழ்வில் பங்கு பெற்ற அலுவலர்களுக்கான தங்குமிட வசதி நிமித்தம் செலவிடப்பட்டது இதன்படி, மொத்த செலவினத்தில் 81 சதவீதம் நோக்கத்திற்காக அல்லது,உணவு மற்றும் தங்குமிடத்திற்காக செலவிடப்பட்டது.	ஆணைக்குழுவானது YIELD 3D புத்தாக்கப் போட்டியுடன் தொடர்புடைய பயிற்சித் திட்டங்களினை ஒழுங்கமைப்பு செய்ததுடன் இதற்கான வள பங்களிப்பானது Panacea Solutions மூலம் இலவசமாக வழங்கப்பட்டது. முடிந்தது. இந்த பயிற்சி திட்டத்துடன் தொடர்புடைய உணவு மற்றும் தங்குமிட வசதிகளை அந்தந்த திட்டத்தின் பகுதிகளாகக் கருதி இந்தத் திட்டங்கள் திட்டமிடப்பட்டன, இந்தத் தொடர் நிகழ்ச்சிகளை வெற்றிகரமாகச் செயல்படுத்த இந்தப் பணிகள் அவசியம். அதன்படி, அந்த திட்டங்களுக்கான மதிப்பீடுகளை தயாரிக்கும் போது, அந்த செலவு வகைகளை உள்ளடக்கிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன, எனவே திட்டத்தின் நோக்கமான பணிகளுக்கு தொடர்புடைய செலவுகள் மேற்கொள்ளப்பட்டன.உத்தியோகத்தர்களுக்குத் தேவையான தங்குமிட வசதிகளாவன முடிந்த வரையில் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன .
20. புதிதாக பதிவு செய்யப்பட்ட கண்டுபிடிப்பு கழகங்களுக்கு நிதி உதவி வழங்க ஆளுநர் சபையின் தீர்மான இலக்கம் 1002.01.07 பிரகாரம் ஒப்புதல் அளிக்கப்பட்ட போதிலும், இருப்பினும், 2019 ஆம் ஆண்டு முதல் பெறப்பட்ட 595 விண்ணப்பங்கள் தொடர்பில் விபரங்கள் சரியாக ஆய்வு செய்யப்பட்டு,அதாவது, பாடசாலையின் பெயர், முகவரி, கணக்கு எண், முதல்வர், ஒருங்கிணைப்பாளர் தொலைபேசி எண் போன்ற சரியான தகவல்களை உள்ளிடுவதன் மூலம் பதிவு செய்யப்பட்ட அல்லது கணினிமயமாக்கப்பட்ட தரவு அமைப்பு அல்லது ஒரு பதிவேடு என்பன புதுப்பிக்கப்படவில்லை.	கணக்கிலக்கம் மற்றும் நாளது வரையிலான தகவல்கள் இந்ததரவுத்தளத்தில் உள்ளடக்கப்படும் .
21. கண்டுபிடிப்பாளர்கள் கமிஷன் Slic/ AC/FM -: 2022 எனும் இலக்கத்தினையும் 2022, நவம்பர் 10 எனும் திகதியினையும் மற்றும் புத்தாக்குனர் ஆணைக்குழுவின் பணிப்பாளர் மற்றும் "காசோலைகளை பணமாக்குவது தொடர்பாக" மக்கள் வங்கிக்கு அனுப்பிய கடிதத்தில், வழங்கப்பட்ட கையோப்பங்களில் சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்களினதும் கையொப்பங்கள் உ;உள்ளடக்கி இருந்தமை நிதிக் கட்டுப்பாட்டில் பலவீனமான நிலைமை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	ஆணையத்தின் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலைப்பிரிவிற்குள் சிறாப்பர் எனும் பதவி இல்லை. எனவே, கணக்காய்வில் காட்டப்பட்டுள்ள காசோலைகளை பணமாக்க முகாமைத்துவ உதவியாளர் பதவியில் உள்ள அலுவலர்களினை மட்டும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
22. 2022 ஆம் ஆண்டில் மாகாண விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்காகச் செய்யப்பட்ட மொத்தச் செலவு ரூ. 1,668,000. 2022 ஆம் ஆண்டின் சஹசக் நிமவும் தேசிய போட்டிக்காக பதிவு செய்யப்பட்ட புத்தாக்கங்களின் எண்ணிக்கை 402 ஆகும். ஊவா மாகாணத்தில் 02 நாட்களாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.209,419 ஆகும். தென் மற்றும் மேல் மாகாணங்களில் 2022 ஆம் ஆண்டுக்கான சஹசக் நிமவும் போட்டிக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், முறையே 84 மற்றும் 93 புத்தாக்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. எனவே, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் புத்தாக்கத்திற்கான உந்துதலில் நேரடி தாக்கத்தினை கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகிறது	ஆணைக்குழுவானது தனது திட்டங்களை செயல்படுத்துவதில் முடிந்தவரை புதிய வகையான திட்டங்களை செயல்படுத்த தொடர்ந்து முயற்சித்து வருகின்றது. இதன் அடிப்படையில், 2022 இல் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு மற்ற ஆண்டுகளை விட அதிகமான மக்களை ஈர்க்க முடிந்ததுஎனினும், நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக, 2022ஆம் ஆண்டில் ஆரம்பித்த நிகழ்ச்சித் தொடரை முறையாக முடிக்க வாய்ப்பு இல்லாமை . நிதி வசதிகளினது பற்றாக்குறையால் திட்டங்களைத் தொடர முடியாமை மற்றும் 2022 ஆம் ஆண்டில் நாடு ஸ்தம்பிதமடைந்திருந்ததனால் அன்றாட நடவடிக்கைகளை மீளமைப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டதால் எதிர்பார்த்த எண்ணிக்கையிலான அளவில் புத்தாக்கங்களினை பெற இயலவில்லை உயர்த்த முடியவில்லை.

	விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் புத்தாக்கத்திற்கான உந்துதலில் நேரடி தாக்கத்தினை கொண்டிருக்கவில்லை என்ற உங்கள் விளக்கத்துடன் நான் உடன்படவில்லை புதிய முறைகளை பின்பற்றுவதன் மூலம் மற்றும் புதிய திட்டங்களை அதிக சிறப்புடன் தொடங்குவதன் ஊடாக கண்டுபிடிப்பாளர்களை மிகவும் திறமையாக ஊக்குவித்து , அவர்களது விழிப்புணர்வினை மேம்படுத்த ஆணைகுழு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
23. பாடசாலைகளில் கண்டுபிடிப்பாளர்கள் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளதா, அவை செயல்பாட்டில் உள்ளதா என்பதை ஆணைகுழு முறையாகக் கண்காணிக்கவில்லை என்பது கவனிக்கப்பட்டது.	2022 ஆம் ஆண்டில் நிதி வசதிகள் இல்லாத காரணத்தால், கண்டுபிடிப்பாளர் சங்கங்களின் கண்காணிப்பை ஆணைகுழுவினால் சரியாக மேற்கொள்ள முடியவில்லை. எதிர்காலத்தில் கண்டுபிடிப்பாளர்கள் சங்கங்களினை தீவிரமாக பராமரிக்க பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க எதிர்பார்க்கிறோம்.
24.ஆண்டிற்கான எழுதுபொருட்களின் தேவைகள் தயாரிக்கப்பட்டு கவனமாக ஆய்வு செய்யப்பட்டு, இருப்புக்கு கட்டளை பிறப்பிக்காததால், ஆண்டு இருப்புத் தேவையை விட ரூ.595,115 அதிகமாக கையிருப்பு இருந்தது.	நிதி ஒதுக்கீடுகள் இல்லாத காரணத்தால் திட்டப் பிரிவினால் செயல்படுத்த திட்டமிடப்பட்ட திட்டங்கள் இந்த ஆண்டில் செயல்படுத்தப்படாமல் போனதால், எழுதுபொருட்கள் அதிக அளவில் குவிந்தன.
25. 2022 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தின் பிரகாரம், ஆணைக்குழுவானது கண்டுபிடிப்பாளர்கள் சங்கங்களினை நிறுவுவதற்கும் இவற்றைக் கண்காணிப்பதற்கும் ரூபாய் 1,800,000 இணை ஒதுக்கீடு செய்தது . இதன் நோக்கமானது ,தேசிய அளவிலான போட்டிகளுக்கு 80 புத்தாக்கங்களினை இதன் மூலம் முன்னளிப்பு செய்யும் பொருட்டு 50 புதிய பாடசாலை சங்கங்களினையும் , 20 பல்கலைக்கழக சங்கங்களினையும் தாபித்தலே ஆகும் . இவ்வாறாக இருந்த போதிலும் , 2022 ஆம் ஆண்டிற்கான சஹசக் தேசிய போட்டி கணக்காய்வு திகதிக்குள் நடத்தப்படவில்லை என்பதுடன் 2019 முதல் 2023 வரையிலான 04 ஆண்டுகளில் பல்கலைக்கழகங்களில் நிறுவப்பட்ட மொத்த சங்கங்களின் எண்ணிக்கை 06 ஆகும். இதன் காரணமாக , ஆணைக்குழு எதிர்பார்த்த இலக்குகளான, இளம் சமூகத்தினரிடையே ஒரு கண்டுபிடிப்பு கலாச்சாரத்தை உருவாக்கல், மற்றும் நாட்டில் முதலீடு வாய்ப்புகளினை ஏற்படுத்தல் போன்ற பயன்களினை அடைய இயலவில்லை	2022 ஆம் ஆண்டில், 132 பாடசாலை கண்டுபிடிப்பாளர் சங்கங்களும், 5 பல்கலைக்கழக கண்டுபிடிப்பாளர் சங்கங்களும் நிறுவப்பட்டுள்ளன. மார்ச் 2020 முதல், கொரோனா தொற்றுநோய், பாடசாலை அமைப்பின் நெருக்கடி நிலைமை மற்றும் நாட்டில் வளர்ந்து வரும் பொருளாதார நெருக்கடி, எரிபொருள் பற்றாக்குறை, விடுபட்ட கல்வி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்தல் போன்றவற்றால் நாடு அவ்வப்போது மூடப்பட்டதனால் தேவையான ஆதரவைப் பெறுவது கடினமாகியது.. இப்பிரச்சினைகளினை தீர்ப்பதற்கு சூழ்நிலைக்கு ஏற்ப, எதிர்காலத்தில், பல்கலைக்கழக அமைப்பில் இன்னும் முறையாக புத்தாக்க சங்கங்களை உருவாக்கும் வகையில் ஆணைக்குழு செயல்படும். மேலும், ஆணைக்குழு செயல்படுத்தும் புதிய திட்டங்களின் கீழ் மிகவும் பயனுள்ள புதிய வடிவமைப்புகளை சமூகமயமாக்கவும், அவற்றை பொருத்தமான வணிகமயமாக்கல் வாய்ப்புகளுக்கு வழிநடத்தவும் ஏற்ற வகையில் ஆணைக்குழு செயல்படும்.
26.2022 டிசம்பர் 31 இல் இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் நிதியத்தின் மீதி ரூ. 12,837,184 மற்றும் இந்த கணக்கு 2022 ஆம் ஆண்டில் செயலற்றதாக இருந்தது.	கண்டுபிடிப்பாளர்களுக்கு கடன் உதவி வழங்குவதை முறைப்படுத்தும் நோக்கத்திற்காக RDB வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளோம், அவர்கள் வங்கி அமைப்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், 07 கண்டுபிடிப்பாளர்களின் களச் சோதனைகள் ஆணைக்குழு மற்றும் RDB வங்கியால் இணைந்து நடத்தப்பட்டுள்ளன.

27. செயல்திட்டத்தின்படி 40 காப்புரிமைகளுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளாவன வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், வருடத்தில் 04 கண்டுபிடிப்பாளர்கள் மட்டுமே ஆணைக்குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டனர்.	காப்புரிமை விண்ணப்பத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தேவையான ஆதரவை வழங்கவும் 09 மாவட்டங்களில் 09 நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அவையாவன, 03 பாடசாலைகள் மற்றும் ஒரு பல்கலைக்கழகத்தில் 04 விழிப்புணர்வு கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் மற்றும் 02 பல்கலைக்கழகங்களுக்கு நிகழ்நிலை அடிப்படையில் காப்புரிமை விண்ணப்பம் மற்றும் தேவையான ஆதரவை வழங்குதல் ஆகியவை உள்ளடங்கும் . 08 பல்கலைக்கழக மாணவர்களுக்காகக்காப்புரிமை தொடர்பில் பயிற்சி பட்டறைகள் இடம்பெற்றன. 09 புதிய கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை விண்ணப்பக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்பட்டது.
28.செயல்திட்டத்தின்முன்னேற்றத்தில் ஒவ்வொரு துணைச் செயல்பாட்டிற்கும் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் நிதி மற்றும் பௌதீக ரீதியிலான முன்னேற்றம் மற்றும் அந்த முன்னேற்றத்தின் சதவீதங்கள் ஒவ்வொரு துணைச் செயல்பாட்டிற்கும் எதிரே தனித்தனியாகத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும், ஆனால் அது இவ்வாறு குறிப்பிடப்படவில்லை.	செயல் திட்டம் 2022 இல் ஒவ்வொரு துணைச் செயலையும் தனித்தனியாகக் குறிப்பிடும் உங்கள் அவதானிப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் உங்கள் அவதானிப்புகளுக்கு ஏற்ப செயல் திட்டத்தைத் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
29. செயல்திட்டத்தில் YIELD திட்டம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் துணைச் செயல்பாடுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு முறையே ரூ.200,000 மற்றும் ரூ.700,000 ஆக இருந்தபோதிலும், அதற்கான செலவு முறையே ரூ.1,367,222 மற்றும் ரூ.2,518,093 ஆகும். இது குறிப்பிட்ட செலவுக்கான வரம்பினை விட அதிகப்படியாக முறையே ரூ. 1,167,222 மற்றும் ரூ.1,818,093 செலவிடப்பட்டுள்ளது.. அதிகப்படியாக செலவிடப்பட்ட தொகை முறையே 584 சதவீதம் மற்றும் 260 சதவீதம் ஆகும் ,	தொடர்புடைய துணைச் செயல்பாடுகளுக்கு அனுமதிக்கப்பட்ட வரம்புகளை மீறும் செலவினங்கள் குறித்த உங்கள் அவதானிப்பினை நான் ஏற்றுக்கொள்கிறேன்.
30. செயல்திட்டத்தின் ஒவ்வொரு திட்டத்தின் கீழும் உள்ள நடவடிக்கைகளில் இருந்து ரூபாய் 6,950,000 பெறுமதியான 05 உப செயற்பாடுகள் வருடத்தில் முன்னெடுக்கப்படவில்லை .	உரிய நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை ஆணைக்குழு பெற்றுக் கொள்ளவில்லை, இதன் காரணமாக பல மாதங்களாக தொடரப்பட்ட இந்த வேலைத்திட்டத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதன்படி, "சஹசக் நிமவும்" -2022 போட்டியானது குறித்த வருடத்திற்குள் நிறைவுபெறவில்லை என நீங்கள் தெரிவித்த அவதானிப்பினை நான் ஏற்றுக்கொள்கிறேன்.
31. மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டின் செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.19,950,000 மதிப்புள்ள எட்டு(08) துணை நடவடிக்கைகள் விரும்பிய இலக்குகளை எட்டவில்லை.	எதிர்பார்த்த இலக்குகளை அடையாத செயல்பாடுகள் குறித்த உங்கள் அவதானிப்பை நான் ஏற்கிறேன்
32. மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் . Innovation To Village என்ற திட்டத்திற்கு ரூ.2,250,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது, ஆனால் அந்த ஆண்டில் ரூ.148,623 செலவில் ஒரு திட்டம் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது.	இந்த வேலைத்திட்டம் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டது மற்றும் ஒரே ஒரு வேலைத்திட்டம் மட்டுமே நடத்தப்பட்டது.